


அவனுள் ஒரு அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்திலிருந்தே கண்டு கொண்டேன். அது அவனது அழகான ஆளுமையாக வளர்ந்தது. ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்துச் சிறப்பியல்புகளும் அவனிடம் இருந்தன. அதனால் அவன் ஒரு அற்புதமான இலட்சியவாதியாக வாழ்ந்தான். போராடினான். அனைத்து மக்களது இதயங்களையும் கவர்ந்தான். போர்க்களத்தில் வீரனாகவும் போராளிகளின் தோழனாகவும், எங்கும் எல்லாவற்றிலும் எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிறைந்திருந்தது. கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட, ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு.

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வே. பிரபாகரன் அவர்கள்*



# களத்தில்

11-01-2001 தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (225)

*நெஞ்சிலே ரத்தம் கொட்டும்*
*நினைவே நெருப்பாகும்– எங்கள்*
*நெஞ்சினிய தோழர்களின்*
*தியாகத்திலே*
*முத்தமகன் கிட்டு அவன் தோழர்*
*குட்டிசிறி*
*மலரவன் ஜீவா குணசீலன்*
*றொசாந்தன் நாயகன் தூயவன்*
*நல்லவன் அமுதன்*
*இந்திய துரோகத்தால் கனலான*
*செய்தியில்*

*நெஞ்சிலே ரத்தம் கொட்டும்*
*நினைவே நெருப்பாகும்–எங்கள்*
*நெஞ்சினிய தோழர்களின்*
*தியாகத்திலே...*

விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த அறிவித்தலை நிராகரித்து போரைத் தொடரப்போவதாகக் கூறும் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா, பேச்சுவார்த்தை மூலம் சமாதானம் காணப்போவதாகவும் தெரிவிக்கின்றார்.

போரும் சமாதானமும் முரண்பட்டு நிற்கின்ற எதிரெதிர் முனைகள். ஒத்துவரும் என்று கூறுவது [illegible] வாதம். [illegible] நடத்திரை [illegible] அப்படித்தான் [illegible]கின்றார்.



# விடுதலைப் புலிகளே தமிழர் பிரதிநிதிகள்
# போரை நிறுத்து! புலிகளுடன் பேசு!!

விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த அறிவித்தலை ஏற்று, போரை நிறுத்தி, விடுதலைப் புலிகளுடன் பேசு என்ற கோசம் எங்கும் எதிரொலிக்கின்றது. தமிழ் மக்களின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் பேசுவதன் மூலமே, தமிழ் மக்களின் அபிலாசைகளை திருப்திப்படுத்தக்கூடிய, இனப் பிரச்சினைக்கான நியாயபூர்வமான தீர்வை எட்டமுடியும் என்பதையும், அதன்வழி அமைதி சமாதானத்தைக் காணமுடியும் என்பதையும் அனைத்துத் தரப்பும் வலியுறுத்துகின்றது. பல்கலைக்கழக சமூகத்தின் எழுச்சி வெகுசனப் போராட்டமாக விரிவடைய, தமிழ்க்கட்சிகளோ இராஜதந்திர உலகில் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன. விடுதலைப் புலிகளின் சமாதான முயற்சிக்கு அனைத்து மட்டங்களிலும் ஆதரவு திரள்கின்றது.

தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி, போரை நிறுத்தி, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்து என்ற கோசத்துடன், யாழ் பல்கலைக்கழக சமூகத்தால் 29.12.2000 அன்று ஆரம்பிக்கப்பட்ட எழுச்சி நிகழ்வுகள், நாளுக்குநாள் தீவிரம் பெற்று, வெகுசன எழுச்சியாக இன்று வளர்ச்சி கண்டிருக்கின்றது. பல்கலைக்கழக மாணவர்களில் ஆரம்பித்து, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பணியாளர்கள் அளவில் விரிவடைந்து, பரந்துபட்ட வெகுசன எழுச்சியாக அது மாற்றமடைந்திருக்கின்றது. 'ஒவ்வொரு தமிழ்மகனும் தனது இனத்திற்கு அநீதி இழைக்கப்படுகின்றது என்பதை உணர்ந்து எழுச்சிகொள்ளும்போதுதான் எமக்கு ஒரு தீர்வு கிடைக்கும்' இவ்வாறு தெரிவிக்கும் இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் பல்கலைக்கழக சமூகத்தின் இந்த எழுச்சியுடன் தானும் இரண்டறக் கலப்பதாக அறிவித்திருக்கின்றது.

பல்கலைக்கழக சமூகத்துடன் [illegible] மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியமும், இந்த சாத்வீகப் போராட்டத்தில் இணைந்துகொண்டு, 'பொங்கு தமிழ்' என்ற வெகுசன எழுச்சி நிகழ்வொன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளன. குடாநாட்டின் அனைத்துப் பகுதியிலிருந்தும் மக்களைக் கலந்துகொள்ளத் தூண்டி யாழ் பல்கலைக்கழக சமூகம் [illegible] சென்று மக்களைச் சந்தித்துவருகின்றது.

ஈழத்தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்த வேண்டிய, வெளியே கொண்டுவரவேண்டிய, பகிரங்கப்படுத்தப்படவேண்டிய ஒரு வரலாற்றுக் காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம் எனத் தெரிவிக்கும், யாழ் பல்கலைக்கழக சமூகம், ஒற்றையாட்சியின் கீழ், ஒரு நாட்டு அரசமைப்பின் கீழ் எமக்கு நிம்மதியான வாழ்க்கை கிடைக்கும் என்ற நம்பிக்கை என்றோ பொய்த்துப்போய்விட்டது என பகிரங்கமாக அறிவிக்கின்றது.

போரை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேசு என்ற கோசத்தை முன்வைக்கும் பல்கலைக்கழக சமூகம், தமிழர்களின் [illegible] அபிலாசை சுயநிர்ணய உரிமையே என்றும், தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையும், அவர்தம் மரபுவழித் தாயகமும் அங்கீகரிக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்துகின்றது.

தமிழ் அரசியல் கட்சிகளும், விடுதலைப் புலிகளின் சமாதான முயற்சிக்கு ஆதரவான தொரு நிலைப்பாட்டை எடுத்து இராஜதந்திர உலகில் பிரச்சாரம் செய்துவருகின்றன. [illegible]

**கேணல் கிட்டு மற்றும் ஒன்பது தோழர்களின் 8ஆம் ஆண்டு நினைவெழுச்சி நாள் 16-01-2001**



# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# ஓயாத அலைகளும் வவுனியாவும்

தமிழீழ விடுதலைப் போராட்டமானது புதிய ஓராண்டில் காலடி எடுத்து வைக்கும் இந்நேரத்தில் 1999இன் இறுதியில் ஈழவிடுதலை வரலாற்றின் போக்கை மாற்றிய ஓயாத அலைகள் -3 இன்போது பொது மகனொருவரின் அனுபவப் பெருக்கு வருமாறு.

நாங்கள் பாதுகாப்புக்காக வவுனியாவுக்கு வந்தவர்கள். வன்னியில் நாலாபுறமும் வளைக்கப்பட்டிருந்ததால், எந்த நேரமும் பெருஞ்சமர் வெடிக்கலாம் என்பது எமக்குத் தெரியும். சண்டை மூண்டால், இராணுவம் அடிக்கும் எறிகணை புலிகளை மணந்து பிடித்து, அவர்களை புத்திசாலித்தனமாக விலகி வந்து எங்களின் தலைகளிலேதான் வெடிக்குமென்பதில் எமக்குப் 10வருடகால அனுபவம். வான்படை விமானங்கள் எந்த ஒரு காலத்திலும் புலிகளின் முகாம்மீது குண்டுகளை வீசுவதில்லை. புலிகளின் மீது அவ்வளவு பயபக்தி.

அதனால் கோயில், குளம், பள்ளிக்கூடங்களின் மீதும், எங்களைப் போன்ற அரச விசுவாசிகளின் மீதும், மிகுந்த பக்தி, பற்றுதல் உணர்வோடு குண்டுகளை எட்டத்தில் நின்று ஏவிவிட்டுப் போயிடும்.

அதனால் எங்கள் குடும்பப் பாராளுமன்றத்தைக்கூட்டி, பலத்த வாதப்பிரதிவாதங்களுக்குப் பின்னர் வவுனியா போகமுடிவெடுத்து, அதனை மிகுந்த கஸ்டத்தின் மத்தியிற் சென்ற இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் செயற்படுத்தி முடித்தோம்.

எனக்கு வவுனியாவுக்கு மாற்றல், மனைவி பிள்ளைகளுக்கு ஒருமாதிரி நீர்கொழும்பிலே இடம்பிடித்துக் கொடுத்துவிட்டுக் கொஞ்சம் நிம்மதியாகப் பெருமூச்சுவிட்டேன்.

'இனிக் குண்டுச் சத்தம் கேட்காது!.

இராணுவம் திடீர் திடீரென்று தேடுதல் செய்யும். மிகமிகப் பெரும்பான்மையான வாக்குகளால்(?) பாராளுமன்றக் காற்றைச் சுவாசிக்கின்ற தடிகாவிய தமிழ்வீரர்களும் இடைக்கிடை வருவதுண்டு அவர்களையெல்லாம் சமாளிக்க, இருக்கவே இருக்கிறது ஒரு அசட்டுச்சிரிப்பு... வவுனியாவிலே என்னகுறை? வானம்பாடியிலேகூட என் குரலைக் காட்டும் வாய்ப்புக் கிடைத்தது. 'என்றுமே இல்லாதவாறு ரெலிபோனில் பாடும் வாய்ப்புக் கிடைத்தது. நான் பாடிய பாட்டு எனக்கே சகிக்கவில்லையென்பது வேறுவிடயம்... திறமான பாட்டென்று தொலைபேசியின் மறுமுனையில் தேன்குரல் சொன்னது. அன்றிரவு நித்திரை இழந்தேன்... அடடா! இந்தச் சுகங்களை இழந்து 96 இலிருந்து 99 ஆகஸ்ட் வரை வன்னியில் வரண்டு வரண்டு வாழ்ந்ததை நினைந்து அப்போது என்னை நானே உரத்த குரலில் சிங்களத்தில் திட்டிக்கொண்டேன்.

இனிமேல் குண்டுச் சத்தம் கேட்காது!

நவம்பர் முதலாம் திகதி... இரவு படமொன்று பார்த்துவிட்டு (என்ன படம் என்று கேட்காதீர்கள்) புரியாணி சாப்பிட்டுவிட்டு என்னுடைய அறையில் முடங்கிக்கொண்டேன். காலமை புலர்ந்த வேளை... வவுனியா பிரதான வீதியையொட்டியது எனது அறை... அதிகாலை 3.00 மணியிலிருந்து வாகனச் சத்தங்கள் அம்புலன்ஸ் அலறல் கேட்கத் தொடங்கியது.

"சரிதான்... எங்கேயோ சண்டை துவங்கிவிட்டுது அநேகமாக ஒட்டுசுட்டானில் இருந்து முல்லைத்தீவுக்கோ, அல்லது புதுக்குடியிருப்புக்கோ, அல்லது இரண்டுக்குமோ ஆமி மூவ் பண்ணியிருக்கவேணும்" என்று நினைத்துக்கொண்டே குளிருக்கு இதமாகப் போர்வையை இழுத்து மூடிக்கொண்டேன். "நல்லவேளை... தப்பிவிட்டம் குண்டுச் சத்தம் இஞ்ச கேட்காது" விடிந்ததும் கதைவேறாக இருந்தது. காதுக்குள் வைத்து "புலிகளின் குரல்" கேட்பவர்களும் IBC, BBC, வெரித்தாஸ் என்று நித்திரை விழிப்பவர்களும் என் காதையும் கடித்துவிட்டுப் போனார்கள்.

"ஒட்டுசுட்டான் விழுந்திட்டுதாம் நெடுங்கேணியுக்க புலியளாம் ஓயாத அலை மூன்டாம் சண்டை தொடருதாம். அண்ணைகொண்ணை தென்னம்பிள்ளையெண்டு ஆமியள் விட்டுட்டுப்போன கவசவாகனம், பவள் வாகனங்கள் ஆயுதங்களெண்டு அள்ளுறாங்களாம். மணிமேகலை வச்சிருந்த அட்சய பாத்திரம் மாதிரி அள்ள அள்ளக் குறையாமற் சுரக்குதாம்"

மனதுக்குள் கொஞ்சமாய் மகிழ்ச்சி ஊற்றுக் கிளம்பினாலும் நான் வெளிக்காட்டவில்லை. வீதிக்கு வீதி இறுகிய முகத்தோடு நின்ற இராணுவத்தைக் கடந்து போகும் போதெல்லாம் முகத்தை படுசோகமாக வைத்துகொண்டேன்.

அடுத்த மூன்று நாட்களுக்குள் வவுனியாவிலும் பரபரப்பு ஆரம்பமாகியது.

"ஒதியமலையில பொடியளாம்... சிலோன் தியேட்டர் பண்ணையிலயாம்.... ஒலுமடுவிலயாம்.. மாங்குளத்திலயாம் கனகராயன்குளத்திலயாம் ஆமி தலைதெறிக்க ஓடுறானாம்"

எனக்குத் திக்கென்றது. இரண்டு நாட்களுக்கு அறையை விட்டுவிலகாமல் இருந்துகொண்டேன்.

என்றாலும் எனக்கொரு திருப்தி. "இஞ்சை குண்டுச் சத்தம் கேட்காது"

திடீரென்று வெடிச்சத்தங்கள் குண்டுச் சத்தங்கள் கேட்கத் தொடங்க... எனக்கு வயிற்றில் ஏதோ செய்யத் தொடங்கியது. ஏதாவது பழசத் தின்னிட்டனோ என்று நினைத்தேன். சே அப்படியிருக்காது என்னோடை தோசை தின்ட றூம்மேற் இன்டு முழுக்க அந்தப் பக்கமே போகயில்ல.

திடீரென்று எங்கள் பியோன் பொடியன் ஓடிவந்தான்.. "ஐயா ஆமிக்காரன் துண்டு துணியில்லாம ஓடிவாறான். கடையளுக்க பூந்து தட்டுகளோட சேத்து எல்லாத்தையும் தின்னுறான். புடவைக் கடைக்க நுழைஞ்சு றோல் றோலா துணியைத் தூக்கித் தோளிலே காவிக்கொண்டு ஓடுறான். எல்லா BAR ஐயும் வயித்துக்க ஊத்திப்போட்டு கண்ட [illegible] வாகனத்தைக் கைகாட்டி நிப்பாட்டி ஏறுறான். ஓடுறான் ஓடிக்கொண்டேயிருக்கிறான்" என்றான்.

எனது றூம்மேற் சாரத்தைத் தூக்கின பாதி, தூக்காதது பாதியா அங்கு ஓடினார்.

வெடிச்சத்தங்கள் கொஞ்சம் உரமாகக் கேட்டது. "ஐயா கனகராயன்குளத்தைப் பிடிச்சிட்டாங்கள் பொடியள்... மணலாத்துப் பக்கமா வளைஞ்சு வந்து புளியங்குளத்தை நெருங்குறாங்களாம்" என்று பயத்தோடு சொன்னான் பியோன்.

"என்ன நாசமடா நான் போற திக்கெல்லாம் குண்டுச் சத்தம் கேட்குது" என்ற படி வெளியே வந்தேன். என்னைப்போலத்தான் வவுனியாச் சனங்கள் பலர் நினைப்பார்கள். வெள்ளை வான் ஒன்டு விரிட்டுக்கொண்டு போனது எங்கட குழுமாடுகள். எங்கையடா உவளவு ஸ்பீட்டா போறாங்கள் சண்டைக்கோ என்டு விசுவாசமாகக் கேட்க, பியோன் நக்கலாய்ச் சிரித்தான்.

"பொறுங்கோ ஐயா பெரசதிசையைப் பார்த்துச் சொல்லுறன்" அடுத்த நாள் காலை 11 மணி இரவிரவாகச் சத்தப் பிராந்தியில் விழித்துக்கொண்டு இருந்துவிட்டு, காலையில்தான் கொஞ்சம் நித்திரையாப்போனன். விழித்துப் பாத்தால் றூம்மேற் சோகமாக என்னைப் பார்த்துக்கொண்டிருந்தான். "என்ன ஐசே மணிசியைப் பாக்கிறமாதிரி என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்" என்று நான் கேலியாச் சொல்ல, அவர் ஒரு பெரிய குண்டைத் தூக்கி என்தலையிலே சே...சே... காதிலே போட்டார்.

"ஐ அய்யா... வவுனியாவைவிட்டு உடன் வெளியேறட்டாம்"

"ஆர்-ஆர் ?" "புலியள்தான்" நான் வெலவெலத்துப்போனேன்... "ஏனாம்?"

"முற்றுகைப்போராட்டம் நடத்தப்போறாங்களாம். எங்களை ஒத்துழைக்கட்டாம்; சனங்கள் இறக்கை கட்டிப் பறக்குது" அவர் சொல்லிமுடிக்கவில்லை. சமர் சமர் என்று ஆட்லறி விழுவது கேட்டது. தாண்டிக்குளமோ, ஓமந்தையோ தெரியாது. புளியங்குளத்தை ஏற்கனவே பொடியள் பிடிச்சிட்டாங்கள். ஒருவேளை ஓமந்தை தாண்டிக்குளத்துக்கையும் வந்திட்டாங்களோ?"

ஒரு பேச்சும் இல்லாமல் என் வயிற்றுப் புரட்சிக்குப் பதில் சொல்ல உள்ளே போய் 10 நிமிடத்தில் வெளியே வந்து பார்த்தால் என் றூம்மேற்றைக் காணவில்லை. கட்டிலுக்கு அடியிலே பார்த்தேன் அவரின் சூட்கேசையும் காணவில்லை....!

நம்பிக்கைத் துரோகி என்று அவரைத் திட்டியபடியே போட்டது போடாதது எல்லாவற்றையும் அள்ளி சூட்கேஸுக்குள் திணித்தேன். பிறகு எதற்கும் பயன்படும் என்று ஒரு போத்தல் சீனி, ஒரு ரம்ளர், ஒரு கரண்டி மறக்காமல் பீக்கொக் சாயம் இவற்றையும் அடைத்தேன். வாசலுக்கு ஓடிவந்து பார்த்தால் செருப்பைக் காணவில்லை.

டொம் டொம் என்று சத்தங்கள் அதிர்ந்தன... நடுக்கத்துடன் செருப்பில்லாமலே வாசலுக்கு வந்தேன்... சூட்கேஸை அறைக்குள் விட்டு வந்தது நினைவுக்கு வந்தது நினைவுக்குவர மீண்டும் உள்ளே ஓடிச் சூட்கேஸைத் தூக்கிக்கொண்டேன். வீதி அல்லோலகல்லோலப் பட்டுக்கொண்டிருந்தது. அங்குமிங்குமாக ரக்ரர், கார், ஓட்டோ என்று ஓடி...ஓடி... ஓடிக்கொண்டிருந்தன. ஒன்றையும் நிற்பாட்ட முடியவில்லை.... சனங்கள் தலைமுதல் கால்வரை கொழுவக்கூடிய இடங்களில் எல்லாம் கொழுவிக்கொண்டு வறுகிக்கொண்டிருந்தனர். 10 ரூபா மண்ணெண்ணையைத் திடீரென்டு என்ன விலை 50ரூ, 60ரூ என்றது. கடை கன்னிகள் எல்லாம் ஹர்த்தால் கொண்டாடின.

கன்னியிலே பட்ட கடையெல்லாம் ஏற்கனவே சாத்தப்பட்டுவிட்டன. சனங்கள் அலையலையாக ஓடிக்கொண்டிருக்க ஆமிக்காரர், பொலிஸ்காரர் கால்மாறிக், கால் மாற்றி நிற்பது தெரிந்தது. ஒருவர் கடையருகில் நின்று கடுமையாக யோசித்துக்கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் மெல்லச் சிரிக்கப் பக்கத்தில் போனேன். எங்கட பொஸ், "என்ன யோசிக்கிறியள்?" "எங்க போறதெண்டு யோசிக்கிறன்... ராசேந்திரகுளத்துக்கோ, மடுவுக்கோ, கொழும்புக்கோ?"

கொழும்பு என்றதும் நீர்கொழும்பிலிருந்த எனது மனைவி பிள்ளைகளின் ஞாபகத்தால் நீர்கொழும்புத்தாகம் வந்தது. "கொழும்புக்கு போவமே?" நான் கேட்டேன்... "என்ரை வைப் கொழும்பிலே பிள்ளைகள் ரண்டும் ராசேந்திரகுளத்துக்கு ஓடுதுகள். யூனிவஸ்டரும் பமிலியும் மடுப்பக்கமாகப் போயினம் அதுதான்.... திக்குத்திசை தெரியாம நான் நிக்கிறன்" என்றார் அவர். எனக்குப் பாவமாக இருந்தது... மெல்ல நழுவி நெல்லுக்குளம் போகும் நோக்கத்தோடு நடந்தேன். கடுமையான செக்கிங் நாலுபக்கமும்... மிலிட்டரி பொலிஸ்; அவன் கையை நீட்ட நான் பேர்ஸை எடுப்பதற்காகப் பையைத்திறந்து வெளியே எடுத்தபடி அவனைப்பார்க்க அவன் முறைத்தான். நான் எனது கையைப் பார்த்தேன். கையிலே எனது செருப்பு... எட்டு நாடியும் (அல்லது ஒன்பதோ) ஒடுங்கிவிட்டது எனக்கு... பயக்கெடுதியில் செருப்பையும் சூட்கேசுக்குள் வைத்திருக்கிறேன்.

மனதுக்குள் என் தலையில் நானே அடித்தபடி செருப்புகளை எடுத்துக் காலிலே போட்டு பேர்ஸை எடுத்து அடையாள அட்டையைக் காட்ட, எனது தமிழ்ப் பெயரைப் பார்த்ததும் சிரித்தபடி "போ போ" என்றான். பாலைக் கேட்கவே இல்லை. எனக்கு மலைப்பு நீங்க முதலே, இரண்டுபேர் வந்தனர். ஐடியைக் காட்டினர்... உடனே அவனது முகம் இறுகியது. துவக்கை எடுத்து நீட்டினான். அவர்களை நோக்கி "நீ ஓடிவந்த ஆமியா?" என்று சிங்களத்தில் கேட்பது எனக்கும் கேட்டது.

ஓடும் ஆமியைப் பிடிக்கிற வேலைபோல என நினைத்தபடி நெளுக்குளம் நோக்கி நடையைக் கட்டினேன்... வழியிலே ஒரே ஒரு கடை அரைக்கதவில் திறந்து இருந்தது. சிங்கள நோனா ஒருத்தியின் கடை. எனக்கு நல்ல பசி. ஏதாவது சுடச்சுட என்று நினைத்தபடி உள்ளே போனேன். வடை, பணிஸ் ஏதாவது இருக்கா என்று கேட்க என்னை, அந்த மாது ஒருமாதிரிப் பார்த்துச் சிரித்தாள்... எனக்கு மயிர்க் கூச்செறிந்தது... உள்ளே கண்ணாடிக் கோப்பைகளின் டிங்டிங் ஒலியும் வெண்டிஸ் மணமும் வந்த பிறகுதான் எனக்குப் புத்தியில் உறைத்தது இது ஒரு மினிபார்.... விர்ரென்டு நடையைக் கட்டினேன்.... நெளுக்குளம் வந்துசேர்ந்தேன். நண்பனின் வீடு பூட்டியிருந்தது. சே.. சே.. என்று தலையில் கையைத் தூக்கியபோதுதான் தெரிந்தது என்கையில் சூட்கேஸ் இல்லை.

என்னசெய்வது, எங்குபோவது என்று தெரியாமல் நின்றபோது, ஏழெட்டு ஆமிக்காரர் ஓடி வந்தனர், "சரி முடிஞ்சுது."

சிலையாக நின்ற என்னைப் பார்த்து ஒருவன் கேட்டான் "இதால நாலைஞ்சு ஆமி ஓடினதா?" நான் தலையை ஆட்டினேன்.

என்னை அப்படியே விட்டுவிட்டு அவர்கள் ஓடிய ஆமியைத் தேடிப்போய்க் கொண்டிருந்தனர். நான் றூமை நோக்கி ஓடினேன்...

இடையிலே ஒரு மரத்தின் கீழ் 10, 15 பேர் நின்றனர். என்னை ஒரு மாதிரிப் பார்த்தபடி இரண்டொருவரின் கையிலே துப்பாக்கி... பளபளப்பான "போர்ட்" ஒன்று மரத்தடியில் சாத்தப்பட்டிருந்தது. ஒரு வெள்ளை வான் மரத்தின் பின்னால். அரைக்கண்ணால் போர்ட்டை கவனித்தேன்.

"டே எங்கட தமிழ் எம்பிக்களின் ஆக்கள்... இவையும் புல்ப்பிளேசாகி அதாவது இடம்பெயர்ந்து எங்கையோ போகினம் போல. அதுசரி...அரசமரத்தடியிலே இருந்தும் தமிழ்ச் சேவை செய்யலாந்தானே"

எனக்கெதிராக விர்ரென்று வந்தது ஒரு அரசாங்க பஸ். அதாவது பேருந்து. மட்டக்களப்பு என்று போட்டிருந்தது. டொம்... டொம் சத்தம் கொஞ்சம் நெருக்கமாக... கையை நீட்டினேன். நின்றது! சடாரென்று தாவி ஏறினேன். என்னைத்தவிர பிரயாணி எவரும் இல்லை... "உயிரைப் பாதுகாக்க வேண்டும் என்டு ஓடுறம். சனமாவது மண்ணாவது" என்றார் நடத்துனர். பிறகு கேட்டார் "எங்கை?" "மதவாச்சி."

ஈரப்பெரியகுளம் உட்பட நாலைந்து இடங்களில் மறித்தார்கள், செக்பொயின்ற் அதாவது உடம்பை உருவிவிடும் இடம். நடத்துநர் சொன்னார் "ஒரே ஒரு ஆள்தான்... தமிழ் ஆள்" உடனே எல்லாம் கிளியர்! எந்தச் செக்பொயின்ட் இலும் இப்ப சிங்களவரைத்தான் மறிக்கிறாங்கள், தமிழனுக்கு நேர [illegible] கிளியர்... என்று பெரிதாகச் சிரித்தான் ஓட்டுநர்.

புலிகளை நினைக்கக் கொஞ்சம் பெருமையாகக்கூட இருந்தது. "ஆமிக்காரனும் எங்கட துவக்குக்காரரும் கெஞ்சக் கெஞ்ச சென்டு கெஞ்சியும் ஒரு பிரயாணியும் நிக்கயில்லை, புலி சொன்னதுதான் தாமதம் பிரியில காலடிபட ஓடிவிட்டுது. பஸ்ஸிலை ஏறயில்லை" என்று ஓட்டுனர் சொன்னார். இது ஒத்துழைப்பா பயமா என்று எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்தவரையில் ஒத்துழைப்புடன் பயம், அல்லது பயத்தினால் ஒத்துழைப்பு.

மதவாச்சியில் பஸ் நிற்க இறங்கினேன். ஒரே சனக்கூட்டம். ஆமி மன்னூடாக... அங்கே சனம் நின்று விடுப்புப் பார்த்தது. நான் சற்றுப் பயத்தோடு நிற்க வவுனியா என்று போட்ட கொழும்பு பேருந்து ஒன்று வந்து நின்றது. நடத்துநர், ஓட்டுனர் இறங்கி ஒரு கடைக்குப் போயினர். 10 நிமிட நேரத்தில் ஓடிவந்த ஓட்டுநர் பஸ்ஸைக் கிளப்பினார். நடத்துநர் தொத்தி ஏறினார். ஒருவரும் பஸ்ஸில் இல்லை. வவுனியா போகும் சாலைக்குத் திரும்பும் என்று நினைக்க, பஸ் கொழும்புச் சாலைக்கு வெட்டித் திரும்பியது. திடீரென்று நான் ஓடி அதற்குள் பாய்ந்து ஏறினேன். சடக்கென்று வண்டி நின்றது.

நடத்துநர் சிங்களத்தில் கேட்டார் "உன் பெயர் என்ன?" எனது பெயரை நடுவில் வெட்டிச் சேர்த்துச் சொன்னேன். சிரிப்போடு ஒரு பெருமூச்சுவிட்ட நடத்துநர் "ஹரி" என்றார்.

பஸ் புறப்பட்டது. இரவு 10 மணியளவில் பஸ் நீர்கொழும்பைத் தாண்ட, நான் இறங்கித் தெரியாமல் ஒரு மைல் நடந்து போய் கதவைத்தட்ட அதை வந்து திறந்த என் மனைவி, "கள்ளன்... கள்ளன்..." என்று கத்த வாயைத் திறந்தாள். என்னை யாரென்று தெரிந்தும் வியப்பிலே வாயை மூடினாள்.

அங்கிருந்து நான் திரும்பவும் வவுனியா வந்ததும். அங்கு பெற்ற அனுபவங்களும் சொல்லி மாளாது பாருங்கோ!

(அனுபவப்பட்டவர் சிரித்துச் சிரித்துச் சொன்ன கதை.)

# மீண்டும் வருவான்

**ச.ச.முத்து**

பண்டிதர் திரும்பி வரவில்லையாம். விடிந்து பதினொரு மணியாகிறது. சந்தைகளின் இரைச்சல். வெயிலின் வெளிச்சம். இன்னும் பண்டிதர் திரும்பி வரவில்லையாம். நள்ளிரவு முடிந்து சிறிது நேரத்தின் பின் வேலிகளும் பனைகளுள் உறங்கி நின்ற பறவைகளும் திடீரென கலைந்து எழ, அந்நிய பாசையுடன் சுற்றி நின்ற இராணுவ முற்றுகை ஒன்றுள் விட்டு வந்த மிக முக்கிய குறிப்புகளை மீள எடுக்கச் சென்ற பண்டிதர் இன்னும் திரும்பவில்லையாம்.

அப்படியானால் பண்டிதர்....?

போய்விட்டானா....?

நினைக்க நினைக்க மனம் ஏற்றுக் கொள்ளாமல் தண்ணீருள் அமிழ்த்திய ரப்பர்ப் பந்துபோல் மீள வந்தது. போய் விட்டானா....?

'ஒருவேளை பிடிபட்டிருக்கலாம்' எனக்குப் பக்கத்தில் யாரோ சொல்வது கேட்டது. யார் சொன்னது என்று நான் திரும்பிப் பார்க்கவில்லை. ஆனால், சொன்னவனுக்கு பண்டிதரைப் பற்றி சரியாகத் தெரிந்திருக்காது என்று மட்டும் மனதுள் முடிவு செய்தேன்.

தலையகற்றிட களமாடியவன் தலையுடன் நடப்பானா....?

ஓரிரண்டு துப்பாக்கிகளுடன் அமைப்பு இயங்கிய காலத்தில் அமைப்பில் இணைந்து தினம் தினம் முற்றுகைக்குள்ளாக நுழைந்து திரிந்து எட்டு வருடங்களாக இயங்கிய பண்டிதர் இம்முறையும் முற்றுகையை உடைத்து வந்துவிடுவான் என்ற நம்பிக்கை நேரம் செல்லச் செல்ல உடைந்து....

பண்டிதர்....ரவீந்திரன் என்ற பெயரை 'பண்டிதர்' என்று மாற்றிப் பெயரிட்டவருக்குத்தான் பண்டிதர் பற்றி எத்தனை பெரிய நம்பிக்கையும், புரிந்துகொள்ளலும் இருந்திருக்கும். பண்டிதர் என்றால் பட்டறிந்தவன்-கற்பிப்பவன். ஓம் பண்டிதரும் கற்பித்தான். தன் நடைமுறை மூலம் எல்லோர்க்கும் கற்பித்தான். அழகான ஆழமான அர்த்தம்-பண்டிதர்.

'மத்தியான சிலோன் நியூசில், அச்சுவேலி முற்றுகை பற்றி சந்தோசமாய் சொல்லுறாங்களாம்....'

'எங்கள் எதிரி கும்மாளம் அடிக்கிறான். என் நண்பனே எங்கேபோனாய்....?

மெதுவாகப் பின்னால் வந்து தோளில் ஊன்றிச் சைக்கிளில் நிற்கும் பண்டிதர்....

மனதும் குரலும் பாசத்துடன் 'என்னம்மான்...' என்று கதைக்கும் பண்டிதர்...

மத்தியானம் இரண்டு மணியாகிறது இன்னும் சாப்பிடவில்லை. ஆனாலும், பசியில்லை. வயிறு, மனது எங்கும் பண்டிதர் பற்றிய நினைவே... வயிற்றுள் ஏதோ பாரமாய்... சிலவேளை வயிற்றுள் ஒன்றுமேயில்லாதது போல....

எங்காவது நல்ல சாப்பாடு கிடைத்துவிட்டால் எல்லோர்க்கும் என காவி வந்து பிரித்துத் தந்துவிட்டு எல்லோரும் சாப்பிடுவதைப் பார்த்து மனது நிறையும் பண்டிதர் அம்மான்....

அவனுடன் பழகிய எவரும் சில மணித்தியாலங்களுக்குள் அவனுடைய அன்பான ஆளுமைக்குள் ஆழ்ந்துவிடுவர். அற்புதமான ஓய்வற்ற ஒரு பம்பரம் அவன்.

'பண்டிதர் அம்மான்.... அங்கை இருக்கிற பொடியளுக்கு புது சப்பாத்துக்கள் வேணும். இருக்கிறதெல்லாம் அறுந்தும் கிழிஞ்சும் போட்டுது. நாளைக்கு அங்கை போறன். வாங்கித் தந்தால் கொண்டு போறன்...'

'பண்டிதர், ஒரு நாற்பது ஐம்பது பேர் இருக்கக் கூடியமாதிரி புது இடம் ஒன்று பார்க்கவேணும். நிறைய மரங்கள் கவர் குடுக்கிற இடமாய் இருந்தால் நல்லது....'

'பண்டிதர் அம்மான், நெடுகிலும் இந்த ஓட்டைச் சைக்கிளை உதைஞ்சு உதைஞ்சு



கப்டன் பண்டிதர்
சின்னத்துரை ரவீந்திரன்
வல்வெட்டித்துறை
25.10.1959-09.01.1985

காலும் நோ மாறேல்லை. அதைவிட நேரமும் வீணாய்ப் போகுது. ஒரு மோட்டார் சைக்கிள் அல்லது சாளி தன்னும் வாங்கித்தாங்கோ....'

'பண்டிதர் அம்மான் ஒவ்வொரு நாளும்.... இடத்துக்கு ஆமி வந்து போறாங்கள், நல்லா அடி கொடுக்கலாம். சாமானும் நிறைய எடுக்கலாம் வந்து ஒருக்கா இடத்தைப் பார்த்துவிட்டுச் சொல்லுங்கோ....'

தினமும் விடிய முன்னரே எழுந்து இரவு நள்ளிரவுக்குப்பின் படுக்கும்வரை அவனுக்கு எத்தனை வேலைகள், எத்தனை கோரிக்கைகள் அத்தனையையும் அழகாக நேர்த்தியாக உள்வாங்கிச் செயற்பட்ட பண்டிதர்....

'ஓடையிலே என் சாம்பல் கரையும் போதும்

என் தமிழே சலசலத்து ஓட வேணும்'

மனமும் உடலும் பஞ்சாகப் பறக்கும் சில குதூகலப் பொழுதுகளில் சீக்கையில் விசிலடித்து இந்தப் பாட்டைப் பாடுவான். நல்ல சந்தோசக் கணங்களில்கூட அவன் ஒரு காதல் பாட்டுப்பாடி நான் கேட்டதில்லை.

என்ன மனிசனப்பா! என்று வாய்பிழந்து நான் அதிசயப்பட்ட பண்டிதர்.

பின்னேரமாகிவிட்டது. பறவைகள் பறத்தலை நிறுத்தி, படுக்கைக்குப்போக ஆரம்பித்துவிட்டன. நாளைக்குப் பறப்பதற்காக இன்று படுக்கப்போகின்றன.

வழமையான அலுவல்களில் ஏதோ ஒன்றின் நிமித்தம் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தபோது, ஊரின் நகரசபை வண்டில் ஒன்றில் யாருமில்லா ஒரு பிணம் தலை அங்கும் இங்கும் வண்டியின் குலுங்கலுக்கு ஆடிப்போய்க் கொண்டிருந்தது.

'என்ன மச்சான், நாங்களும் ஒருநாள் இப்பிடித்தானோ...? நகரசபை வண்டியில் ஒருவருமில்லாமல்....'

இல்லை நண்பனே! இல்லை இன்னைக்கு நீயும், நீ சுமந்துபோன லட்சியமும் லட்சம் லட்சம் மக்களால் உணர்வாக அறியப்பட்டுள்ளது.

கடலில் போன போட்டைப் பார்த்தபடி கடற்கரைத் தென்னை மரங்களின் அடியில் இரவின் நட்சத்திரங்களை எண்ணியபடி இருக்கும் வேளைகளில்....

'மச்சான் அம்மா இழுக்கத் தொடங்கி விட்டுது....'

'பண்டிதர் பக்கத்திலை செல்லச்சந்திரன் டாக்குத்தரிட்டை போய் காட்டிப் போட்டு வருவம், வாவன்....'

'இல்லை மச்சான், போர்ட் வரட்டும், இன்டைக்கு நிறைய.... வரும். பார்த்து கிளியர் பண்ணிப்போட்டு பிறகு போவம்' ஆஸ்மா இழுப்பு பாறாங்கல்லாய் நெஞ்சை அமத்த, சின்னச் சின்ன மூச்சுக்களாய் கஸ்டப்பட்டு விட்டுக்கொண்டும் விலகாமல் கடலைப் பார்த்து நிற்கும் பண்டிதர்.

ஒன்றாய்ப் படித்த நண்பர்கள் கூடி விட்டால்....

'மச்சான், எங்களோடை படிச்ச சந்திரனை நேற்றுக் கண்டனான். ஆள் கலியாணம் முடிச்சுவிட்டான். மனுசியை எனக்கு அறிமுகப்படுத்தினான்டாப்பா....'

'டேய் மச்சான், அவன் அப்பவே சதாசிவம் மாஸ்ரர் கந்தன் பனையால் விழுந்தான், என்ன காலம் இறந்த காலமோ, நிகழ்காலமா என்டு கேட்க. இல்லை மாஸ்டர் 'கஸ்ட காலம்' என்று சொல்லி வகுப்பாலை கலைபட்டவன், ஞாபகமிருக்கோ....'

சிரிப்பு குபீர் என எழும்ப பழைய ஞாபகப் புகையிலிருந்து இன்பமாய் மீண்டும்....

'சரி சரி இன்டைக்கு எல்லாரும் ஒன்டாய் இங்கை படுக்க ஏலாது. சிலவேளை, ஆமி ரவுண்ட் அப் நடந்தால் எல்லாரும் ஒன்றாய் முடிய வேணும். மூன்று பேர் போய் ரெம்பில் றோட்டிலை இருந்து படிக்கிற ரூபனின்ரை ரூமிலை போய்ப் படுங்கோ இன்டைக்கு...' என்று சொல்லி அனுப்பும் பண்டிதர்.

'பண்டிதர்.... இந்த இடத்திலை வந்து நிற்கிறார், வரட்டாம்' பண்டிதரிடமிருந்து ஆள் வந்து சொன்னவுடன் சைக்கிளை உழக்கிக் கொண்டு போனால்,

ஆட்டுக்குட்டி ஒன்றை மடியில் வைத்துத் தடவி விளையாடிக் கொண்டு

'என்றாப்பா வந்தால் உன்னை காண முடியாமல் கிடக்குது

எங்கை போனனி...?'

சொல்லிக் கொண்டே ஆட்டின் முகத்தை அன்பாய்த் திருப்பி 'மணிக்குட்டி இவனைத் தெரியுமோ' என ஆடும் கழுத்து மணியை டிங்... டிங்... என்று ஆட்டி தலையாட்டுவதைப் பார்த்து கண்கள் கூசி குழந்தையாய்ச் சிரிக்கும் பண்டிதர்.

இந்தத் தலைமுறையிலேயே பெரிய வளர்ச்சியை காண முடியும் என்ற நம்பிக்கை பெரிதாக வளராத காலம் அது. ஒருவன் ஒரே கடையிலேயே தினகரன், தினபதி, வீரகேசரி, ஈழநாடு, Daily News வாங்கினால் கடைக்காரனே சந்தேகப்படும் அந்தக் காலத்தில் ஒருகடையில் தினகரன் மற்றக் கடையில் தினபதி இன்னொரு கடையில் வீரகேசரி என்று வாங்கி வந்து தமிழீழத் தேசிய எழுச்சிச் செய்திகளை வெட்டி வெட்டி அழகாக திகதி வாரியாக ஒட்டி தேசிய எழுச்சி வரலாற்றை ஆதாரத்துடன் அடுத்த தலைமுறைக்கும் அறியவைக்க விரும்பிச் செயற்பட்ட பண்டிதர்.

இரவு மெல்ல மெல்லக் கருமையாகிறது. சில வண்டுகள் வெளியே வந்து சிலம்பத் தொடங்கிவிட்டன.

இரவுகளின் அலுவல்கள் எல்லாம் முடிந்து பத்துப் பதினொரு மணிக்கு சன நடமாட்டம் வீதிகளில் குறைந்த பின்னர் எங்கே போய்ப்படுப்பது என்ற கேள்வி தூக்கக் கண்களுள் கேள்விகளாக எழ, எங்கே போய்ப் படுப்பது... யார் இடம் தருவார்கள் இன்று...?

'பூட்டிக்கிடக்கும் பாடசாலை வாங்கிலில் படுக்கலாமா...?'

'கட்டி முடிக்காமல் கிடக்கும் [illegible] வீட்டுள் படுக்கலாமா...?'

எல்லாரும் ஒவ்வொன்றைக் கூற இறுதியில்

'நாலு பேரும் போய் [illegible] கடலைக்குள்ளே படுப்பம். நாகதாளியளும், சவுக்கை மரங்களும், சருகும் நிறைஞ்சிருக்கிற அந்த இடத்திலை படுத்தால் ஒருத்தருக்கும் தெரியாது. விடிய நிலம் தெளிய முதல் எழும்பி அவரவர் இடத்துக்கு போவம்...' என்று கூறிய பண்டிதர்.

'இன்று இவ்வளவு நேரத்தில் எங்கே படுத்திருக்கிறாய் நண்பனே!

மெல்லியதாய் புகைப்பனி புல்லெங்கும் படர்ந்தும், மரங்களின் அடியில் இலைகளின் அருகில் உறங்கிப் படுத்திருக்கும் அந்தக் காடுகளின் அதிகாலை வேளைகளில் மயில்கள் அகவுவதைப்பார்த்து ரசித்துக் கொண்டே இருக்கும் அந்தப் பண்டிதர் எத்தனை ஆழமாய், எத்தனை ரசனையுடன் தாய்மண்ணை அதில் தாங்கி நின்ற தளிர்களை, பூக்களை, மரங்களை, தென்னைகளை நேசித்தாய்.

இதோ உன்னுடைய வீரமரணம் உத்தியோக பூர்வமாக அமைப்பால் அறிவிக்கப்படுகிறது. நாளைய பத்திரிகைகளுக்காக அனுப்பப்படத் தயாராக இருக்கும் உன்னுடைய வீரமரண அறிக்கை.

நீ போய்விட்டாய் என்பது நிச்சயத்திலும் நிச்சயமாக்கப்பட்டுவிட்டது. உண்மையாகவே போய்விட்டான்.

ஆனால் எங்கே போனாய் என் நண்பன்.

எங்கே போனாய் பண்டிதர்!

அலையும் நெருப்பென நீ ஒவ்வொருநாளும் ஓடித்திரிந்த மண் இன்றும் உன் கவடுகளை தேடி நிற்குது. அன்பான அணைப்பில் உன்னுடன் செல்லம் கொஞ்சி விளையாடும். அந்தச் சின்னஞ் சிறுசுகள் இன்று உன்னைக் காணவில்லை என்று வழிபார்த்து நிற்கின்றனர்.

'பண்டிதர் மாமா எங்கே?' என்று அவர்கள் கேட்டால் என்ன சொல்ல.

'அவர் சாமியிட்டை போயிட்டார்' என்று சொல்லிவிடவா..

எங்கே போனாய்...

உன்னை எதிர்பார்த்து நிற்கும் உன் ஓலைக்குடிலின் அந்தத் தாய்க்கும், உன் அம்மாச்சிக்கும் என்ன சொல்லிவிட முடியும். அவர்கள் எழுப்பும் அந்த ஒப்பாரி அழுகைக் குரல் எங்கள் கண்களின் உறுதிக் கரையை உடைத்து கண்ணீரை பாய வைத்துவிடும் அல்லவா...?

எங்கே போனாய் பண்டிதர்...?

எங்கே போனாய்...

எங்கும் போகவில்லை நீ! அண்ணனின் வழிகாட்டலில் நீ மெல்ல மெல்ல அத்திவாரம் இட்டு உருவாய் வளர்த்த இந்த அமைப்பு என்றும் போராடும்... தமிழீழ தேசம் விடுதலை காணும்வரை நம்மோடு போராடும்.

அந்தப் போரின் ஒவ்வொரு அதிர்விலும் நீ இருப்பாய்.

நீ எங்கும் இல்லாமல் போய் விடவில்லை.

கண்களைக் கூசி நீ சிரிக்கும் சிரிப்பினை நாளை

எங்கள் சுதந்திர தேசக் குழந்தைகளில் நாம் காண்போம்.

பண்டிதர்...

(தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நிதி ஆயுதப் பொறுப்பாளனாய், மூத்த தளபதியாய் விளங்கிய கப்டன் பண்டிதர் என்கிற ரவீந்திரன் நினைவாக இந்தக் கட்டுரையில் 09.01.85ஆம் நாளின் காலையிலிருந்து மாலை வரையான எண்ணங்கள் எழுத்துருவம் பெற்றுள்ளன.) ■

# ஓயாத அலைகள் எழுப்பும் பேரோசை கேட்கிறதா?

தமிழா–தமிழா...
திராய் நகரத்துப் பெருஞ்சுவரை
கிரேக்கத்துப் பெருந்தானை
அன்று இடித்தது
ஒரு பெண்ணுக்காக
கடவுளர்கள்
ஒலிவம் இலையை எறிந்து விட்டு
ஒலிம்பிய மலையிலிருந்து
இறங்கி
சுவரைத் தாக்கினர்.
காத்தனர்
ஆரியவர்த்தனத்து
அண்ணன் தம்பிகள்
அடிபாடு
கடவுளர் சேனைகள்
ஒருபுறம்
கிருஸ்ணரும் தேரும்
மறுபுறம்
குருசேத்திரக் களியலில்
இதுவும்
ஒரு பெண்ணுக்காக
குட்டிக்கடவுளர்
வால், மயிரோடு
அவதரித்ததும்
அனந்தசயனனும்
ஆதிசேடனும்
அம்பு வில்லோடு
அலைந்ததும்
திராவிட இலங்கைக்கு
தீயிருந்து கொடுத்ததும்
ஒரு
பெண்ணுக்காக..!
இதிகாசமென்று
இருவிழிகளில்
ஒற்றிக் கொள்கிறாய்..
இரண்டு கைகளையும்
உச்சியிலே
மாலையாக்குகிறாய்..

அட தமிழா!
கடவுளின் சங்கொலியும்
தேர்களின் மணியொலியும்
இதிகாசக் குருதி நீரின்
சளசளப்பும்
மட்டுந்தான்
உன்
செவியிலே கேட்குமா

இதோ
ஓயாத அலைகள்
ஒலிக்கிறதே
கேட்கிறதா?
இது
ஒரு பெண்ணுக்காகவல்ல
இந்த
மண்ணுக்காக..

தமிழா தமிழா
இதிகாசப் புராணத்தின்
கடவுளர் யாரும்
கச்சை இறுக்கி
உன்
கட்சிக்கு வரவில்லை

பூலோகச் சண்டியர்
பூத்தொடுப்பதும்
பொன் கொடுப்பதும்
அரிவாளைத் தீட்டும்
சமாதான
தேவதைக்குத் தானே
வாலோடு யாரும்
அவதரித்து
உன்
வேதனைக்கு மருந்திடச்
சஞ்சீவி மலையைத்
தூக்கி
வரவில்லையே..!
எந்தத் தேவதைகளின்
அட்சயபாத்திரத்திலும்
உன்
பசிக்களை தீர்க்கும்
பருக்கைகளைக்
காணவில்லையே!

ஒரு
பருக்கையிலிருந்து
ஒரு கோடி
வயிறுகளைக் குளிர்விக்கும்
வடமதுரைக்
கிருஸ்ண பரமாத்மாக்கள்
உன்
வயிற்றுப்பாலையில்
கருணை மழையைத்
தூவவில்லையே!

உயரத்தூக்கிய
அடிமைக்கைகளை
இறக்கிவிட்டு கேள்
ஓயாத அலைகள்
ஒலிக்கின்றனவே..
கேட்கிறதா?
ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்
ஆரிய வெள்ளத்தில்
அடிபட்டுப்போன
தமிழ் முரசம்
இன்று
முழங்கத் தொடங்குகின்றது..

வெண்ணிக் கரிகாலன்
விரல் தட்டிய முரசம்
இன்று கழப்போரிலே
புதிய கரிகாலனின்
போர்ப்பாட்டுக்கு
முழங்குகிறது

போரென்றால் போரென்ற
ஆரிய மூக்குகள்
அன்றுண்டு போகவும்..

சோமபானத் தேவதையின்
பக்குவ முறையின்
பாசிசைக் கழுவவும்..
சிறையிருந்த
உனது மண்
சிலிர்த்துச் சிரிக்கவும்
தமிழை மறந்திருந்த
மணலாற்றுத் தென்றல்
இன்று
கவிதை படித்த படி
கார்த்திகை மழையிலே
தீக்குளித்து எழவும்
ஓயாத அலைகள்
ஒலிக்கின்றதே..
கேட்கிறதா?

உனது..
முன்னோரின் மூச்சில்
பசளையிடப்பட்ட
தமிழீழ மண்
அழைக்கிறது
வா!
அலையின் துளியாக
உன்
பெயரைப் பதிவு செய்ய
வா!

## மாவீரர்நாள் 2000

சுவீடன்





2.12.2000 அன்று சுவீடனில் மாவீரர்நாள் நிகழ்வுகள் எழுச்சிகரமாக நடந்தேறின. இந்நிகழ்வில் பலநூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.



இத்தாலி



3.12.2000 அன்று பலர்மோ நகரில் மாவீரர்நாள் நிகழ்வு சிறப்புற நடந்தேறியது. இந்நிகழ்வில் இத்தாலி வாழ் தமிழீழ மக்களோடு நூற்றுக்கணக்கான இத்தாலியர்களும் கலந்து கொண்டனர்.

| AUSTRALIA | CANADA | DENMARK | FRANCE | GERMANY | ITALY |
|---|---|---|---|---|---|
| TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | LTTE<br>P.O Box 47,<br>7400 Herning. | TCC<br>341 Rue Des Pyrenees,<br>75020 Paris | TCC<br>Postfach 101613,<br>46016 Oberhausen. | TCC<br>Paolo Balsamo-11<br>100 Palermo. |
| **NETHERLANDS** | **NORWAY** | **SWITZERLAND** | **SWEDEN** | **UNITED KINGDOM** | **U.S.A** |
| TCC<br>P.O.Box 18600,<br>2502 EP Den Haag | TCC<br>P.O BOX 1699 Vika,<br>0110 Oslo. | WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | TCC<br>Glomminge Grand-25<br>3rd Floor,<br>16362 Spanga | UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB | W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L Jamaica<br>New York 11432 |



# சந்திரிகாவை உலுக்கும் சமாதானப் புயல் வேசமே மோசமாகி...

சிறீலங்கா அரசு, போர்நிறுத்தத்தை நிராகரித்தபோதும், நல்லெண்ண சமிக்ஞைகள் எதுவுமே தேவையற்றது என ஒதுக்கியபோதும், தம்மால் அறிவிக்கப்பட்டபடி, ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தை இதுநாள்வரை விடுதலைப் புலிகள் உறுதியாகக் கடைப்பிடித்து வருகின்றனர். விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த அறிவிப்பை நிராகரித்து, சிறீலங்கா அரசு டிசம்பர் 23ஆம் திகதி விடுத்த அறிக்கைக்குப் பதிலாக, விடுதலைப் புலிகளால், டிசம்பர் 26ஆம் திகதி விடுக்கப்பட்ட அறிக்கையில், சிறீலங்கா அரசு விட்டுக்கொடாத போக்கைக் கடைப்பிடித்த போதும், சமாதான முயற்சிக்கு இன்னுமொரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கத் தீர்மானித்திருக்கின்றோம் என்றும், சிறீலங்கா அரசு தனது நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்து, போர்நிறுத்தத்தைக் கடைப்பிடித்து, நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்க முன்வருமென எதிர்பார்ப்பதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தனர்.

விடுதலைப் புலிகள் மாத்திரமன்றி, சமாதான விரும்பிகளும் அனைத்துலக சமூகமும் இந்த எதிர்பார்ப்புடனேயே இருந்துள்ளன.

விடுதலைப் புலிகளின் இந்தச் சமாதான நகர்விற்கு, சிறீலங்கா அரசதரப்பில் இருந்து, பலவிதமான குரல்களில் பலவிதமான கருத்துக்கள் வெளிவந்தன. எனினும் அதிகாரம் வாய்ந்த குரலாய், உத்தியோகபூர்வமான கருத்தை சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா இரண்டு வாரங்களின் பின்னரேயே முன்வைத்துள்ளார். இந்த மாதம் எட்டாம் திகதி யாழ் குடாநாட்டு மக்களுக்கு செய்மதியூடாக ஆற்றிய உரையில், முதல் முதலாக, அவர் விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த அறிவித்தலை அரசு நிராகரித்திருப்பதாக அறிவித்திருக்கின்றார். யாருமே நம்பத் தயாரில்லாத புளித்துப்போன அவரது பழைய கதையான, நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த விடுதலைப் புலிகளும் ஐக்கிய தேசியக்கட்சியுமே தடையாக இருக்கின்றன என அவர் தெரிவிக்க மறுக்கவில்லை. பழைய பல்லவியான அரசியலமைப்பில் மாற்றத்தைச் செய்து தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாகவும் தெரிவித்தார். கூடவே, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்தும் அவர் தெரிவித்தார்.

மொத்தத்தில், அவர் குழம்பிப்போயிருப்பதும், மக்களைக் குழப்ப முயற்சிப்பதுமே அவரது உரையினூடாக வெளிப்பட்டது. மாறாக அமைதியையும், சமாதானத்தையும் விரும்பும் குடாநாட்டு மக்களுக்கு எதுவுமே அவரது உரையில் இருக்கவில்லை என்பதைவிட, அவரிம் இருந்து எம்மக்கள் எதையும் எதிர்பார்க்கவில்லை என்பதே பொருத்தம்.

சமாதானத்தைக் காண்பதற்காக உழைத்து வருபவர் என்ற, சர்வதேச சமூகத்தின் முன்னைய மதிப்பீடுகள் யாவும் பொடிப்பொடியாகி, சந்திரிகா சிங்கள பௌத்த பேரினவாதத்தை தலைமையேற்று நடத்துகின்றவர் என்ற கணிப்பீடு மெல்ல மெல்ல உருவாகி வருகின்றது. சந்திரிகா அரசின் சமாதானம் பற்றிய இனிமைதரும் பொய்ப் பிரச்சாரத்தால், சிந்தனை தொலைத்த பல சர்வதேச நாடுகள் சந்திரிகா அரசை வளப்படுத்தியும் வலுப்படுத்தியும் வந்துள்ளன. ஆனால், தற்போது சந்திரிகா அரசின் உண்மை நிலைப்பாட்டை உணர்ந்துகொள்ளும் வாய்ப்பு அவற்றிற்கு ஏற்பட்டிருக்கின்றது. அவற்றின் சமாதானக் கருத்துக்களால் சந்திரிகா அரசு கலவரமடைவதையும் எரிச்சலுறுவதையும் அவற்றால் புரிந்துகொள்ளமுடியும். விடுதலைப் புலிகளின் போர்நிறத்த அறிவிப்பும், சமாதான அறைகூவலும், சந்திரிகா அரசின் உண்மைத் தோற்றத்தை வெளிப்படுத்தும் காரியத்தை செவ்வனே செய்திருக்கின்றது.

Tamileelam Archive

இன்று விடுதலைப் புலிகளின் சமாதான முயற்சிக்கு ஆதரவாக, பல குரல்கள் கேட்கின்றன. அது சர்வதேச நாடுகளில் இருந்தும், இலங்கைத்தீவிலும் எதிரொலிக்கின்றது.

யாழ் பல்கலைக்கழக சமூகம், பெரும் எழுச்சிப்போராட்டத்தையே ஆரம்பித்து நடத்திவருகின்றது. மாணவ சமூகத்தில் ஆரம்பித்து, பல்கலைக்கழக சமூகமாக விரிவடைந்து, மனிதநேய அமைப்புக்களின் ஒன்றிணைவுடன் அது வெகுசனப் போராட்டமாக எழுச்சி பெற்றிருக்கின்றது. தமிழ் கட்சிகளோ சிறீலங்கா அரசுமீது சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கும் விதமாய் இராஜதந்திரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன. பரந்துபட்ட வெகுசனப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் அவை அறிவித்துள்ளன. சிறீலங்கா அரசின் இன அழிப்புப் போருக்கு ஆதரவழிப்பதுடன், அதன் ஒரு கருவியாகச் செயற்படும் ஈ.பி.டி.பி. கூலிக்குழு தவிர்ந்த, தமிழ்க்கட்சிகள் இது விடயத்தில் இணைந்திருப்பது சந்திரிகா அரசுக்குப் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பது வெளிப்படை.

சமாதானம் சமாதானம் என, உள்நாட்டு மக்களையும், வெளிநாட்டு மக்களையும் ஏமாற்றிவந்த சந்திரிகா, இன்று, சமாதானம் என்றால் கடுப்புக்கொண்டுள்ளார். சர்வதேச சமூகத்தின் ஆரோக்கியமான ஆலோசனைகளைக் கருத்திற்கொண்டு, சமாதானப் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டதுடன், அதன் முதல்படியாக, நல்லெண்ண சமிக்ஞையாக விடுதலைப் புலிகள் அறிவித்த போர்நிறுத்தத்தால், சிறீலங்கா அரசு, இராஜதந்திரத் தளத்தில் அப்பட்டமாகத் தோற்றுப்போய் நிற்கின்றது.

முழுக்க நனைந்துவிட்டால் முக்காடு எதற்கு என்ற முதுமொழிக்கு ஒப்ப, தனது சமாதான வேடம் கலைந்துவிட்ட நிலையில், மூடிமறைப்பதற்கு அவசியமற்று, சந்திரிகா அரசு வெளிப்படையாகவே களம் இறங்க வாய்ப்புள்ளது. சர்வதேச சமூகம் எதிர்த்து நின்றாலும் ஒரு இனஅழிப்புப்போரை நடத்த சந்திரிகா அரசு திட்டமிட்டுள்ளதாகவே உணரப்படுகின்றது.

போரை நிறுத்தி பேச்சுவார்த்தை நடத்து என்ற கருத்துடன் திரண்டெழும் வெகுசனப் போராட்டத்தை அடக்க, சந்திரிகா அரசு, நாசகார வழிமுறைகளைக் கையாள முயற்சிக்கும் என்பதும் வெளிப்படை. அவர்கள் விடுதலைப் புலிகளின் ஆட்கள் என்றோ, புலிகளின் தூண்டுதலாலேயே இத்தகைய போராட்டங்கள் நடத்தப்படுகின்றன என்றோ கூறி, சமாதானத்தை வலியுறுத்தும் உள்ளூர் மக்களை சிறீலங்கா அரசு தண்டிக்கக்கூடும். ஆனால், சர்வதேச சமூகத்தின் சிறீலங்கா அரசின் போர்வழிக்கு எதிரான நிலைப்பாட்டை அது எப்படியும் சந்தித்தே ஆகவேண்டிவரும்.

அதனைவிட, விடுதலைப் புலிகள் பற்றிய தவறான மதிப்பீட்டுடன், போரை நடத்தப் பிரியப்படும் சந்திரிகா அரசு, களமுனையில், விடுதலைப் புலிகளின் தகுந்த பதிலடிகளை நிட்சயமாக எதிர்கொள்ளவேண்டிவரும். அதுமட்டுமின்றி, பட்டபின்பு ஞானம் பின்னால் தேவையற்ற ஒன்றாகிப் போய்விடும் சிங்களத்திற்கு. ■

## போரை வலியுறுத்தும் பேரினவாதிகளுக்குப் பாதுகாப்பு சமாதானத்தைக் கோரும் தமிழருக்கு எச்சரிக்கை

தமிழ் மக்கள் தமது அபிலாசைகளை வெளிப்படுத்தி, ஏகோபித்த குரலாய் ஒலிப்பது சிங்களத்தைப் பொறுத்தவரை கேடுநிரம்பியது. தமிழ் மக்கள், பயந்து ஒதுங்கி, உயிருக்கு இரந்துவாழும் நிலையில் இருந்து, உரிமைக்காகக் குரல் கொடுக்கத் துணிந்துவிடக்கூடாது என்பதுதான் சிங்களத்தின் விதி. இன்று, வெகுசன எழுச்சி கருக்கொண்டு வருவதைக் காணச் சகிக்காத, சிங்களப் பேரினவாத அரசும், அதன் கூலிகளும் சினங்கொண்டு, மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

போரை நிறுத்துமாறு கோரியோ, புலிகளுடன் பேசுமாறு கோரியோ போராட்டம் நடத்தினால், கடுமையாக தண்டிக்கப்படுவர் என, சிங்களப்படையினரும், அதன் கூலிகளும் பகிரங்கமாக பொதுமக்களை எச்சரித்திருக்கின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில், புளியந்தீவு, கோட்டைமுனை, புதூர், திமிலைத்தீவு, வீச்சுக்கல்முனை ஆகிய இடங்களில் வாழும் மக்கள், இத்தகைய போராட்டங்கள் நடத்தக்கூடாது என, சிங்களப் படையினரால் எச்சரிக்கப்பட்டுள்ளனர். ஒலி பெருக்கி பொருத்தப்பட்ட வாகனத்தில் சென்று, சிங்களப்படையினர் மக்களை மிரட்டும் இந்த அறிவித்தலை விடுத்தனர். புலிகளின் போர்நிறுத்தத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. புலிகளையும் புலிகளுக்கு ஆதரவானவர்களையும், தனிநாடு கோருபவர்களையும் முற்றாக அழிக்கப்படும்வரை, யுத்தம் தொடரும் என்று அறிவித்த சிங்களப் படையினர், இந்நிலையில் போர்நிறுத்தம் வேண்டும், புலிகளுடன் பேசவேண்டும் எனக்கூறி, போராட்டம் நடத்த யாரும் புறப்பட்டால் அவர்கள் மன்னிக்கப்படமாட்டார்கள் என எச்சரிக்கை விடுத்துள்ளனர். விடுதலைப் புலிகளின் போர் நிறுத்த அறிவித்தலை அரசு நிராகரித்துள்ளதாக, சனவரி ஐந்தாம் திகதி, சிறீலங்காவின் ஊடகத்துறை அமைச்சர், தெரிவித்த அன்று, இந்த சமாதானத்தை வலியுறுத்துவோருக்கு எதிரான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தென்தமிழீழத்தில் நிலைமை இவ்விதம் இருக்க, வட தமிழீழத்தில், பல்கலைக்கழக சமூகம் ஆரம்பித்த எழுச்சி நிகழ்வு, வெகுசனப்போராட்டமாக உயர்வடிவம் எடுத்து வருகையில், இந்த வெகுசன எழுச்சியைப் பொறுக்கமாட்டாத ஈ.பி.டி.பி. கூலிக்குழு, அநாமதேய எச்சரிக்கைத் துண்டுப்பிரசுரம் ஒன்றை விடுத்துள்ளது.

மட்டக்களப்பில் இராணுவத்தினர் மேற்கொண்ட பாணியில், ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனத்தில் சென்று மக்களை எச்சரிக்கவும் முற்பட்டது ஈ.பி.டி.பி. கூலிக்குழு. அராலிப்பகுதியிலும், அதனை அண்டியுள்ள பகுதிகளிலும், ஈ.பி.டி.பி.யினர் வாகனத்தில் சென்று, எழுச்சி நிகழ்வுக்கு ஆதரவு வழங்கக்கூடாது என மக்களை எச்சரித்துள்ளனர்.

போர்நிறுத்தத்தையும், பேச்சுவார்த்தையையும் வலியுறுத்தும் தமிழ்க்கட்சிகளைக்கூட, சிங்களமும் அதன் கூலிகளும் விட்டுவைக்கவில்லை. போர்நிறுத்தம், பேச்சுவார்த்தைக்காக குரல்கொடுக்கும் பத்துத் தமிழ்க்கட்சிகளும் விடுதலைப் புலிகளின் குரலாக ஒலிக்கின்றன என, ஈ.பி.டி.பி. கூலிக்குழு வகைப்படுத்தியுள்ளது.

கொழும்பில், விடுதலைப் புலிகளுடன் பேசக்கூடாது எனவும், இலங்கைப் பிரச்சினையில் வெளிநாடுகள் தலையிடக்கூடாது எனவும், ஆர்ப்பாட்டப் பேரணிகளையும், வன்முறை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள, இனவாத சக்திகளுக்கு ஊக்கமும், பாதுகாப்பும் வழங்கும் சந்திரிகா அரசு, சமாதானத்தை அவாவி, போர்நிறுத்தம் பேச்சுவார்த்தையை மேற்கொள்ளுமாறு எழும் தமிழ்மக்களின் குரலை, தனது இராணுவ பலம்கொண்டு நசுக்க முற்படுகின்றது. ■

# சிங்கத்தின் குகையிலிருந்து உறுமிய வீர விருட்சத்தின் நினைவில் உறைவோம்



12.08.1938 -05.01.2000

குமார் பொன்னம்பலம் என்ற மாமனிதத்தின் திண்ம உடலம் சிங்களக் கொலைக் கரத்தால் குதறப்பட்டு ஓராண்டு ஆகிவிட்டது. தமிழீழ தேசத்தின் விடுதலையை உயரிய கனவாக நினைவிற் கொண்டு தாயகத்தின் விடுதலைக்காக சீரிய பணியாற்றிய அபூர்வத் தமிழனை, வஞ்சகச் சதியால் இழந்துவிட்டோம் என தமிழீழ தேசம் கலங்கி 365 நாட்கள் முடிந்து விட்டனவா? நம்பவே முடியவில்லை. தமிழீழத் தாயின் மலர்விற்காக சுடரேந்திய புதல்வன் பகைவனின் கோட்டைக்குள் வைத்து கோழைத்தனமான முறையில் கடந்த 05.01.2000 அன்று கொல்லப்பட்டார்.

மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள் அரசியல் இலாபங்களுக்கு உட்பட்ட ஒரு மனிதரல்ல. புரட்சிகரமான அரசியல்வாதி. நேர்மைத் திறனும் திடசித்தமும் ஒருங்கே சேர்த்து மனித குலத்தின் நியாயத்திற்காக குரலெழுப்பி வந்தார். சிறீலங்காத் தலைப்பட்டினத்தில் நின்று பௌத்த பேரினவாதத்திற்கு பலத்த சவால் விடுத்தார். இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்னரும் சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு "உம்முடைய உரையில் நீர் யாரை எச்சரித்தீரோ அவர்களில் நானும் ஒருவன். உம்முடைய எச்சரிக்கைகளுக்கு அடிபணிய மறுப்பவர்களில் நானும் ஒருவன்" என்று கூறி அம்மையாரின் சபைக்கு முன்னால் நின்று சங்கநாதம் செய்தவர்.

தமிழீழ தேசத்தின் மீதான அதியுயர் பற்றின் காரணமாக உலகப் பரப்பெங்கும் அலைந்து தாயகத்தில் தம்முறவுகள் படும் பாடுகள் குறித்து பிரச்சாரம் செய்தவர். சமாதான முகமூடி போர்த்த அம்மையார் பௌத்த பேரினவாதத்தின் சாத்தான் என்ற உண்மையை உலகறியச் செய்யப் பாடுபட்டார். தமிழீழ மக்களின் விடிவு தனி நாடுதான் என்று உறுதியாக நம்பியவர். அதுவும் ஆயுதப் போராட்ட வாயிலாகவே சாத்தியமாகும் என நம்பியவர். அதனால் எதிரிகள் சூழ்ந்த பிரதேசத்தில் வாழ்ந்தாலும் தமிழீழ விடுதலைப் புலிகளையும், விடுதலைப் புலிகளின் கொள்கைகளையும் பகிரங்கமாக ஆதரித்ததோடு, அதற்குச் சார்பாக பிரச்சாரங்களையும் மேற்கொண்டார்.

அவர் ஆற்றிய பெரும்பணிக்காக தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் "மாமனிதர்" விருது கொடுக்கப்பட்டு 08.01.2000 அன்று கௌரவிக்கப்பட்டார்.

சிங்களம் நினைக்கின்றது வெறுமனே தனிமனிதர்களை அழித்துவிடுவதன் மூலம் அவர்கள் கொண்டுள்ள இலட்சியக் கனவுகளை அழித்துவிடலாம் என்று. ஆனால் இலட்சிய வீரர்கள் மறைவது கிடையாது. அவர்கள் விதைத்த விதைகளில் வாழ்வார்கள். ஆம் இன்று மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள் விதைத்த இலட்சிய நெருப்பில் ஆயிரம் மாமனிதர்கள் உதயமாவது திண்ணம்.

மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள் படுகொலை செய்யப்பட்டு ஓராண்டு நிறைவடைந்ததை ஒட்டி தமிழர் மனித உரிமைகள் மையம் விடுத்துள்ள அறிக்கையில் 'திரு. குமார் பொன்னம்பலத்தின் படுகொலை பற்றி பல சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள், ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவிலும், உப ஆணைக் குழுவிலும் தமது கண்டனங்களைத் தெரிவித்து சிறீலங்கா அரசு ஓர் சுதந்திரமான விசாரணையை நடத்த வேண்டும் என்று வேண்டியுள்ளன.

இன்றுடன் திரு. குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்டு ஆண்டு ஒன்றாகின்றது. இதுவரையில் இக்கொலை சம்மந்தமாக சிறீலங்கா யாரையும் கைது செய்யவில்லை. சோசலிச ஜனநாயகக் குடியரசு என்று பெயரை வைத்துக் கொண்டிருக்கும் சிறீலங்கா அரசு, மாமனிதர் குமார் பொன்னம்பலத்தைக் கொன்றவர்களைக் கவனமாகப் பாதுகாத்தும் பராமரித்தும் வருகின்றது. இப்படுகொலைக்கு பல தடயங்கள் இருந்தும் சிறீலங்காப் பொலிசார் எந்தவித நடவடிக்கையும் எடுக்காதது, சிறீலங்கா அரசே இக்கொலையைச் செய்தது என்பதை நிரூபிக்கின்றது' என்று குறிப்பிட்டுள்ளது. ■

# சந்திரிகா அரசினால் பெறப்படும் உதவிகள் தமிழர் தாயகத்தில் பயன்படுத்தப் படுகின்றனவா?

சிறீலங்கா அரசானது தனது இனவெறி பிடித்த யுத்தச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதன் மூலம் தனது பொருளாதார இறைமையினை படிப்படியாக இழந்து வருவதும், தற்போது யுத்தத்திற்கும் மக்களின் அன்றாட பொது வசதிகளிற்காகவும் வெளிநாட்டு உதவிகளில் தங்கி நிற்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளமையும் யாவரும் அறிந்தவிடயம்.

சிறீலங்கா அரசானது ஆரம்ப காலகட்டங்களில் அபிவிருத்திப்பணிக்கெனவும், வறுமை ஒழிப்பு நடவடிக்கைக்கு எனவும் விசேடமாக நாடுகளிடமிருந்து பெருமளவு நிதிகளைப் பெற்றுள்ளபோதும் அவை முழுமைபெறாத நடவடிக்கைகளாக இருந்து வந்தன என்பது பொருளாதார வல்லுநர்கள் கருத்து. யுத்தம் தீவிரமடைந்த காலப்பகுதியில் அபிவிருத்திக்கெனப் பெறப்பட்ட நிதிகள் யுத்தத்திற்காகப் பயன்படுத்த ஆரம்பித்தமை முழுமை பெறாமைக்கான காரணமாக அமைந்தது எனலாம்.

பொ.ஐ.முன்னணி அரசு முற்றுமுழுதாக, சர்வதேசத்திடம் உதவிகளைப் பெற்று தமது யுத்த முன்னெடுப்புக்களை தொடர்ந்து வருகின்றது. சமாதானத்திற்கான போர் என பெருமளவு நிதிகளை வெளிநாடுகள் அள்ளிக் கொடுத்தமையும், மீட்கப்பட்ட பிரதேசங்களில் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ளவென பல சர்வதேச அமைப்புக்கள் பெருமளவு நிதிகளை வாரி வழங்கியமையும், எனப் பலவழிகளில் சந்திரிகா அரசு தமக்குத் தேவையான நிதிகளை பெற்றுக்கொண்ட போதும் இந்த நிதிகளும் தமிழ் மக்களின் அழிவிற்காகவே பயன்படுத்தப்படுகின்றன என்பதனை சகல தரப்பினரும் அறிவர். ஆனால் சிங்கள அரசும் அதற்குச் சார்பாகச் செயற்படும் சில சர்வதேச அமைப்புகளும் நிதி எந்தவகையான நடவடிக்கைக்குப் பெறப்படுகின்றனவோ அந்த வகையான நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்பட்டதாக ஆவணங்களைத் தயாரித்துக் கொள்கின்றன. இதற்குப் பலிக்கடாக்களாக ஏதும் அறியாத அப்பாவிப் பொதுமக்கள் உள்ளாகின்றனர். அத்துடன் அரசியல்வாதிகளும், சில அமைப்புகளும் பொய்மையான ஆவணத் தயாரிப்புகளிற்கு உதவுகின்றன. சில சலுகைபெறும் அதிகாரிகள் ஊக்கசக்தியாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

சந்திரிகா குமாரதுங்க அரசு தான் பெறுகின்ற நிதிகள் அனைத்தையும் தமிழ் மக்களின் துன்பங்களை மூலதனமாக வைத்தே பெறுகின்றது. இதற்குப் பல ஆதாரங்களைக் குறிப்பிடலாம்.

மனிதாபிமான உதவிகளுக்கான ஐரோப்பிய சமூக அமைப்பிற்கு ஜேர்மனி, பிரான்ஸ், அயர்லாந்து, நெதர்லாந்து, டென்மார்க், சுவீடன் ஆகிய நாடுகள் நிதி வழங்குனர்களாக இருக்கின்றன. இந்த அமைப்பு ஜேர்மன் அரசின் நிதியுதவியின் கீழ் பல்வேறு நிதியுதவிகளாக பெருந்தொகை நிதி வழங்கியுள்ளது.

இது தவிர பிரான்ஸ், அயர்லாந்து, நெதர்லாந்து, டென்மார்க், சுவீடன், ஆகிய நாடுகளின் நிதி உதவியின் கீழ் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான புனரமைப்புப் பணி எனும் திட்டத்தின் கீழ் 69,819,108 யூரோ நாணயங்கள் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், இவ்வுதவித் திட்டங்களிற்கு இக்காலப்பகுதியில் நடந்தது என்ன? 1997, 1998 காலப்பகுதியில்தான் சந்திரிகா அரசினால் தமிழ் மக்கள் மீதான யுத்தம் தீவிரப்படுத்தப்பட்டது. பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்ததும் இக்காலப் பகுதியிலேதான். அத்துடன் வடபகுதியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அங்கவீனமானவர்கள் மற்றும் கொலையுண்டவர்களும் அதிகரித்ததும் இக்காலப்பகுதியிலேதான்.

ஆனால், சிங்கள அரசு இவற்றினை மூடி மறைப்பதற்காக வடக்கில் மீளக்குடியேற்றம், புனர்நிர்மாணம் எனும் பெயரில் பெருமளவு விளம்பரங்களுடன் யாழ்ப்பாணத்தில் சிற்சில வேலைத்திட்டத்தினை செய்து உலகிற்குத் தான் நேர்மையான அரசாகக் காட்டிக்கொண்டது. யாழ்ப்பாண புனரமைப்பிற்கு நிறுவன நிதியில் 14 மில்லியன் DM நிதியினையே (15 மில்லியன் ரூபாவினையே) செலவழித்தது குறிப்பிடத்தக்கது. இன்னொரு வன்னி மக்களிற்கான உதவித் திட்டம் எனும் பெயரில் வவுனியா மாவட்டத்தில் அரசகட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் 25 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்களே செய்யப்பட்டது. எனவே மிகுதி நிதிகள் எவ்வாறு எங்கே பயன்படுத்தப்பட்டது? விளக்கம் தரவேண்டியவர்கள் அரசா? அல்லது நிதி வழங்கிய நாடுகளா?

வடக்கு–கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான புனரமைப்பு என்ற பெயரில் வழங்கிய நிதிகள் என்பதால் தமிழ் மக்களிற்கு கேட்கும் உரிமை உண்டு அல்லவா!

இக்காலப்பகுதியில் சிங்கள அரசு 1998, 1999 காலப்பகுதியில் [illegible] செய்யப்பட்ட வேலைத்திட்டங்களைக்கூட சிங்கள அரச படைகள் இருந்துதான் [illegible] 2000ஆம் ஆண்டு தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் யாழ் நகர் மற்றும் கிழக்குப்பகுதிகளிலும் புனரமைக்கப்பட்ட பகுதிகள் இருந்துதான் தரைமட்டமாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதற்காக அந்த நாடுகள் வழங்கிய நிதியினையே பயன்படுத்துகின்றது அரசு. எனவே உதவி வழங்கும் நாடுகள் சற்றேனும் சிந்தித்து புரிந்துகொள்ள வேண்டியது என்ன? அரச படைகளினால் நடைமுறைப் படுத்தப்படும் பயங்கரவாதச் செயல்களினால், ஏற்படும் தமிழ் மக்களின் துன்ப துயரங்களை மூலதனமாக வைத்து உதவி வழங்கும் நாடுகளிடம் உதவிகளைப் பெற்று தனது இன அழிப்பு யுத்தத்தினை சிங்கள அரசு மேற்கொள்கிறது என்பது ஒரு பக்கம் இருக்க,

அடுத்ததாக யுத்தத்தினால் தமிழர் தாயகப் பிரதேசங்களை அழித்து, அதனை புனரமைப்பிற்கு என மீண்டும் நிதிகளைப் பெற்று அதனை யுத்தத்திற்கே மீண்டும் பயன்படுத்தி எஞ்சிய பகுதிகளையும் அழித்தொழிக்கும் சங்கிலித் தொடரான அழிப்பு நடவடிக்கையே இலங்கையில் நடக்கிறது. இதில் நன்மை அடைவோர் சிங்கள ஆட்சியாளர்களும், பெரும் தரகர்களுமே ஆகும்.

இறுதியாக கடந்த மாதம் 18ஆம் திகதி இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளிற்கான கூட்டம் நடைபெற்றது. இதற்கு முன்னதாக ஐரோப்பிய ஒன்றியம் விடுத்த அறிக்கையில் சிறிலங்கா அரசினையும், விடுதலைப் புலிகளையும் 20 வருடகால இனப் பிரச்சினையால் துன்பப்படும் மக்களின் நலனை முன்னிட்டு இரு தரப்பும் [illegible] என்பதனை தெரிவிக்கும் எனக் குறிப்பிட்டிருந்தது.

இவ்வறிக்கையில் விடுதலைப் புலிகளை தெரிவிக்க வேண்டியதோ அல்லது அறிவுறுத்த வேண்டிய தேவையோ ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இருக்காது ஏனெனில் விடுதலைப் புலிகள் இது தொடர்பாக தமது கருத்தை தெளிவாகத் தெரிவித்து உள்ளனர்.

ஆனால், சிங்கள அரசுதான் ஆக்கபூர்வமற்ற கருத்துக்களைத் தெரிவித்து வருகிறது. இறுதியாக கதிர்காமர் கூறிய கருத்துக்கும், ஐரோப்பிய ஒன்றியச் சிந்தனைக்கும் கருத்திலும் முரண்பாடு தோன்றுகிறது.

எனவே இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் எடுக்கப்போகும் தீர்க்கமான முடிவு என்ன? அதாவது, சந்திரிகா அரசினை பேச்சுவார்த்தைக்கு வலியுறுத்தப் போகின்றனவா அல்லது வழமையாகவே செய்வது போன்று கைக்கூலியினைப் பெற்றுக்கொண்டு வாய்மூடிப் போகின்றனவா?

அறிவன் ■

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தம் அரசியல்தீர்விற்கான ஒரு சந்தர்ப்பம்

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருதலைப்பட்சமாக அறிவிப்புச் செய்துள்ள ஒரு மாதகாலப் போர்நிறுத்தம் சமாதான நடைமுறைகளை மேம்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை என்பதை எவருமே நிராகரித்துவிட முடியாது. விடுதலைப் புலிகள் இயக்கம் அண்மைக்காலத்தில் சமாதான நடவடிக்கைக்கு அளித்துவரும் ஒத்துழைப்பின் உயர்ந்தபட்ச நடவடிக்கை இதுவென்று கூடக் கூறலாம்.

சர்வதேச மத்தியத்துவத்துடன் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வொன்றைக் காணும் முயற்சிக்கு விடுதலைப் புலிகள் தம்மாலான சகல ஒத்துழைப்பையும் வழங்கி வருவதினை இப் போர்நிறுத்தம் மேலும் உறுதிசெய்வதாக உள்ளது. அதாவது நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தி வந்த விடுதலைப் புலிகள் மற்றுமொரு நகர்வாக இப்போர் நிறுத்தத்தை அறிவிப்புச் செய்துள்ளனர்.

ஏற்கனவே தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்தபோது விடுதலைப் புலிகள் இயக்கம் நிபந்தனையற்ற பேச்சிற்குத் தயாராக உள்ளதெனத் தெரிவித்திருந்தார். இதேசமயம், பேச்சுவார்த்தை வெற்றி பெறுவதற்கு நல்லதொரு புறச்சூழ்நிலை உருவாக்கப்படுதலின் அவசியத்தையும் குறிப்பிட்டிருந்தார்.

இதன்பின்னர் மாவீரர்தின உரையிலும் விடுதலைப் புலிகள் இயக்கம் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராக இருப்பதாக தெளிவாகவே அவர் ஊர்ஜிதம் செய்தார். இவ்வுரையானது மிகவும் தெளிவானதாகவும், குழப்பங்களோ, முரண்பாடுகளோ எதுவும் அற்றதாக புலிகளின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தது.

இந்த ரீதியில், பேச்சுவார்த்தை குறித்து புலிகளினால் தெளிவான நிலைப்பாடு மேற்கொள்ளப்பட்டமையானது சர்வதேச சமூகத்தின் வரவேற்பையும் பெற்றது. இதன் வெளிப்பாடாக உலக நாடுகள் குறிப்பாக மேற்குலகம் விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும் என வெளிப்படையாகக்கோரும் அளவிற்கு வந்தன.

இதேவேளை, சிறீலங்கா அரசாங்கமோ இதுகுறித்து தெளிவான ஒரு நிலைப்பாட்டை எடுக்கவில்லை. மாறாக விடுதலைப் புலிகளின் சமாதான முயற்சிகளுக்கான ஒத்துழைப்பை புலிகளின் பலவீனம் எனவும், புலிகளின் நிலைப்பாடு தெளிவற்றிருப்பதாகவும், புலிகளின் நிலைப்பாடு குறித்து நோர்வேயின் விசேட தூதுவரிடம் சில விளக்கங்கள் கோர வேண்டியுள்ளது எனவும் கூறி சமாதான முயற்சிகளைத் தட்டிக்கழித்து வந்தது.

ஆனால், தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்தித்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் புலிகளின் நிலைப்பாட்டைத் தெளிவாக விளங்கிக் கொண்டுள்ளதோடு, அதனை சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவிடம் தெளிவாக விளக்கியும் கூறியிருந்தார். தேசியத் தலைவர் பிரபாகரனைச் சந்தித்த பின்னர் கொழும்பு திரும்பிய எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்த பின்னரே பத்திரிகையாளரைச் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால், அதன் பின்னரும் தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் உரையானது மிகத் தெளிவாக புலிகளின் நிலைப்பாட்டை உறுதி செய்தது. ஆனால், சிறீலங்கா அரசோ அவற்றைப் பரிசீலித்ததாகத் தெரியவில்லை. போர் நிறுத்தம் என்பது சாத்தியமற்றதொன்று எனவும், பொருளாதாரத் தடை நீக்கம் மேற்கொள்ளப்பட முடியாது எனவும் கூறிவந்தது.

அத்தோடு, இராணுவம் வாபஸ்பெற வேண்டும் என புலிகள் வற்புறுத்துவதாகவும், பாரிசில் நடந்த உதவிவழங்குவோர் மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உண்மைக்கு மாறாகப் பேசினார்.

ஆனால், தலைவர் பிரபாகரன் எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்த போதோ அன்றி தனது மாவீரர் தின உரையின்போதோ வடக்கு-கிழக்கில் உள்ள இராணுவத்தினரின் நிலைப்பாடு குறித்தும் பிரஸ்தாபிக்கவில்லை. அதாவது, போர்நிறுத்தம் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான நல்லதொரு புறச்சூழ்நிலையை உருவாக்கும் எனக் கூறியிருந்தாரேயொழிய அதற்கு அப்பால் இராணுவத்தின் நிலைகுறித்து பிரஸ்தாபிக்கவில்லை.

ஆகையினால், புலிகள் இராணுவத்தை முகாம்களுக்குள் முடங்கச் சொல்கின்றனர். வாபஸ் பெறச் சொல்கின்றனர் என்பதெல்லாம் ஆட்சியாளர்கள் சமாதான முயற்சிகளுக்குப் போடமுனையும் முட்டுக்கட்டைகளாகவே கொள்ளத்தக்கதாகும்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு மாத காலத்திற்குப் போர்நிறுத்தத்தை அறிவித்திருப்பதானது மீண்டும் ஒரு தடவை சமாதானத்திற்கான ஒத்துழைப்பை உறுதிசெய்வதற்கான நடவடிக்கையாக அமைந்துள்ளது. அதாவது, அரசாங்கத்தரப்பு முன்னெடுக்கத் தயங்கும் ஒருமுடிவை விடுதலைப் புலிகள் துணிச்சலுடன் எடுத்துள்ளனர் எனலாம்.

சிறீலங்கா ஆட்சியாளர்களோ இவ்வொருதலைப்பட்சமான போர்நிறுத்தத்தை மதிக்காமல், புலிகளின் அறிவிப்பு பலவீனத்தின் வெளிப்பாடு எனக்கூறவும்கூடும். ஆனால், விடுதலைப் புலிகள் பலவீனமான நிலையில் உள்ளனர் எனக்கூறுவது, கடந்த ஆண்டின் பிற்பகுதியிலும், இவ்வாண்டின் ஆரம்பத்திலும் சிறீலங்கா இராணுவம் சந்தித்த அவமானகரமான தோல்விகளை மறந்துவிட்ட பேச்சாகும். சிறீலங்கா அரசு பெரியளவில் புதிய ஆயுத தளபாடங்களை கொள்வனவு செய்துள்ளது என்பதானது இராணுவத்தின் மனச்சோர்வைச் சிறிது போக்குவதாக இருக்கலாம். ஆனால், இராணுவச் சமநிலையை அது தலைகீழாக மாற்றிவிடப்போவதில்லை.

ஆனால், சிறீலங்கா இராணுவமோ அன்றி அரசோ தப்பானதொரு அளவீட்டைக்கொண்டு இராணுவச் சமநிலை தமக்குச் சாதகமானதாக உள்ளது எனக் கருதுவது சிறுபிள்ளைத்தனமானது. அதாவது யாழ். குடாநாட்டை இராணுவம் தக்கவைத்துக்கொள்வதை ஒரு சாதனையாகக் கொள்ளுதல் பலவீனத்தின் வெளிப்பாடே ஒழிய பலத்தின் வெளிப்பாடாக இருக்கமுடியாது. ஏனெனில் எதிர்த்தரப்பின் இருப்பை கேள்விக்குள்ளாக்குவதே இராணுவ வெற்றியாகும். ஆனால், தமது இருப்பை உறுதி செய்வதை இராணுவ வெற்றி என மார்பு தட்டுவது பகிடிக்குரியதொன்றாகும்.

ஆகையினால், விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பானது பலவீனத்தின் வெளிப்பாடல்ல. சமாதான முயற்சிகளை மேம்படுத்துவதற்கான ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கையே ஆகும். இதனைச் சிறீலங்கா அரசாங்கம் புரிந்துகொள்ளுதல் அவசியமானது. அவ்வாறு இல்லாது இச்சந்தர்ப்பத்தை அது புறந்தள்ளுமேயானால் அது சிறீலங்கா அரசிற்கே பாதிப்புக்களை விளைவிக்கத்தக்கதாக இருக்கும்.

ஏனெனில், விடுதலைப் புலிகளின் இப் போர்நிறுத்த அறிவிப்பானது ஒருபுறம், சமாதான நடைமுறைகளை மேம்படுத்தும் முயற்சி என்பதாக இருக்கையில், மறுபுறம் விடுதலைப் புலிகள் அமைப்பின் வெற்றிகரமான அரசியல் இராஜதந்திர நகர்வு எனவும், அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். அதாவது, சிறீலங்கா அரசு மீதான ஓர் அரசியல் இராஜதந்திர அழுத்தத்தை விடுதலைப் புலிகள் இயக்கம் கொடுத்துள்ளது என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இனப்பிரச்சினை தொடர்பாக வெளியுலகில் சிறீலங்கா அரசாங்கம் மேற்கொண்ட பிரச்சாரங்கள், இராஜதந்திர முயற்சிகள் பெரும்பாலும் தோல்வியைத் தழுவிக் கொண்டுள்ளன என்றே மதிப்பிடப்படுகிறது. விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பு என்ற அரசின் பிரச்சாரம் இன்று ஓர் பலவீனமானதொரு கட்டத்தை அடைந்துள்ளது.

ஏனெனில், இனப்பிரச்சினைத் தீர்வுக்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துதல் வேண்டும் என்ற மேற்குலகத்தின் நிலைப்பாடானது தமிழ் மக்களின் பிரச்சினைகளை விடுதலைப் புலிகள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் என்பதை அவை ஏற்றுக்கொண்டுள்ளன என்பதன் வெளிப்பாடே ஆகும்.

அத்தோடு, விடுதலைப் புலிகள் இச்சமாதான முயற்சிகளில் உளப்பூர்வமாகவே ஈடுபடுவதாக மேற்குலகம் நம்புகின்றது. 'தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பை நான் வரவேற்கின்றேன். இது உண்மையான போர்நிறுத்தமாக, கடைப்பிடிக்கின்ற போர்நிறுத்தமாக இருக்கும் என நம்புகின்றேன்' என்ற பிரிட்டிஷ் துணை வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெய்னின் கூற்றுக்களும், 'சமாதானப் பேச்சுக்கள் மீதான தங்களது முழுமையான விருப்பத்தை விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த அறிவிப்பு மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்' என்ற சிறீலங்காவிற்கான அமெரிக்கத் தூதர் அஷ்லி வில்ஸின் கூற்றுக்களும் விடுதலைப் புலிகள் மீதும், அவர்கள் மேற்கொள்ளும் சமாதான முயற்சிகள் மீதும் மேற்குலகம் நம்பிக்கை கொண்டுள்ளதை வெளிப்படுத்தும் அம்சமாகவே கருதத்தக்கதாகும்.

**ஜெயராஜ்**

இது ஒருவகையில் விடுதலைப் புலிகள் இராஜதந்திரரீதியில் ஈட்டிய வெற்றி என்றே கொள்ளத்தக்கதாகும். அதாவது மேற்குலகின் பார்வையில் விடுதலைப் புலிகள் குறித்து மாற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளதை இவை வெளிக்காட்டுகின்றன.

மேலும், கடந்த 18ஆம் 19ஆம் திகதிகளில் பாரிசில் இடம்பெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வொன்று காணப்படுதல் வேண்டுமென்பதும், யுத்தம் நாட்டின் சமூக பொருளாதார ஒழுங்கையும், வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் பெரியளவில் பாதிப்பதாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டமையும், சிறீலங்கா அரசின் நிலைப்பாடு மாற்றத்திற்கு உள்ளாக வேண்டும் என அவை விரும்பியதன் விளைவே ஆகும்.

இதைத்தவிர பாரிஸ் உதவி வழங்கும் மாநாட்டில் சிறீலங்கா அரசிற்கு முழுமையான உதவி கிடைக்கப்பெறாமல் போனமையானது, சிறீலங்கா அரசின் நிலைப்பாட்டில் முழு அளவிலான திருப்தியை அவை கொண்டிருக்கவில்லை என்பதையே வெளிப்படுத்தியுள்ளது. அவ்வாறு இல்லாவிடில் சிறீலங்கா அரசு முழு அளவிலான நிதி உதவியை பெற்றுக்கொண்டிருக்கும். ஆனால், நிலைமை அதற்கு ஏற்ப சாதகமாக இருக்கவில்லை என்பதை மாநாட்டின் பின் நடந்த நிகழ்வுகளும் வெளிக்காட்டுவதாக உள்ளது.

இவ்வாறு நிலைமை சாதகமற்றதாக இருந்தமைக்கு சிறீலங்கா அரசாங்கம் பேச்சுவார்த்தைகளுக்கான உறுதியான முயற்சிகளை மேற்கொள்ளாமையும், பேச்சுவார்த்தைகளுக்கான முயற்சிகளைத் தட்டிக்கழிக்கும் வகையில் பொருத்தமற்ற காரணிகளை வெளிப்படுத்தியமையும் காரணிகளாக இருக்கலாம்.

இந்நிலையில், விடுதலைப் புலிகள் அமைப்பு, ஒருதலைப்பட்சமாக ஒரு மாதகால யுத்தநிறுத்தத்தை அறிவித்துள்ளமையானது சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்திற்கு ஒருவகை நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துவதாக அமையக்கூடும். சந்திரிகா அமைச்சரவையின் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் 'விடுதலைப் புலிகள் தமது விருப்பப்படி எம்மை இழுத்துச்செல்ல முனைகின்றனர்' எனக் கூறியிருப்பது இதனை உறுதி செய்வதாகவே உள்ளது.

அதாவது, சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசாங்கம், பேச்சுவார்த்தைக்கு முன்பாக யுத்தநிறுத்தம் என்பது சாத்தியமற்றதென வலியுறுத்தி வரும் நிலையில் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தமானது அரசாங்கத்தை யுத்தநிறுத்தம் பற்றிய நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

அதிலும், மேற்குலகின் ஆதரவைப் பெற்றுள்ள இந்த யுத்தநிறுத்த அறிவிப்பானது, உள்ளூரில் பிரதான எதிர்க்கட்சியின் ஆதரவையும் பெற்றுக் கொண்டுள்ளது. பிரதான எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க இந்த யுத்தநிறுத்த அறிவிப்பை வரவேற்றுள்ளதோடு, விடுதலைப் புலிகளின் இந் நல்லெண்ண நடவடிக்கையை அரசாங்கம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில் சிறீலங்கா அரசாங்கம் இப்போர் நிறுத்த அறிவிப்பை எவ்வாறு பார்ப்பினும் விடுதலைப் புலிகளைப் பொறுத்து அது அனுகூலமானதாகவே இருக்கும் என அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர். ஏனெனில், விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பிற்கு இணக்கப்பாடான நிலைப்பாடொன்றை அரசாங்கம் மேற்கொள்ளுமேயானால் விடுதலைப் புலிகள் எதிர்பார்ப்பது போன்றதொரு பேச்சுவார்த்தைக்கான புறச்சூழல் உருவாவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கப்படும். இது புலிகள் சமாதானத்திற்கு ஆற்றிய பங்களிப்பாகவும் பார்க்கப்படும்.

அவ்வாறு இல்லாது சிறீலங்கா அரசு யுத்த நிறுத்தத்தை நிராகரித்து யுத்தத்தைத் தொடருமானால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று மேற்கொள்ளப்படுவதை சிறீலங்கா அரசு விரும்பவில்லை என்பதை அது வார்த்தையில் செய்வதாக மாறிவிடும். இது உலகத்தின் அபிப்பிராயத்தை நிராகரிப்பதாக இருக்கும். மேலும் விடுதலைப் புலிகள் சமாதானத்திற்குத் தயாராக இல்லை என்ற சிறீலங்கா அரசின் பிரச்சாரத்திற்கு முற்றுப் புள்ளி வைப்பதோடு, விடுதலைப் புலிகள் மீதான நம்பகத்தன்மையை அதிகரிப்பதாகவும் இருக்கும்.

இந்தவகையில், விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்த அறிவிப்பானது ஒருபுறம் விடுதலைப் புலிகளின் சமாதானத்திற்கான வெளிப்படையான நிலைப்பாட்டையும், மறுபுறம் அரசியல் இராஜதந்திரரீதியில் அது மேற்கொண்டுள்ள வெற்றிகரமான நகர்வு ஒன்றாகவும் நோக்கத்தக்கதாகும். மறுவளமாக சிறீலங்கா அரசிற்கு முக்கியமான அரசியல் தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது மட்டுமல்ல, அத்தீர்மானங்கள் சிறீலங்கா அரசிற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பாதகமான சூழ்நிலைகளை உருவாக்காது பார்த்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தையும் உருவாக்கியுள்ளது. ■

# அவுஸ்திரேலிய தொலைக்காட்சியில் "புலிகளுக்குப் பின்னால்" நிகழ்ச்சிக்கு சிங்களக் கல்விமான் ஒருவரின் மனந்திறந்த மறுப்பு

சென்ற இதழ் தொடர்ச்சி..

எங்கள் புலனாய்வுச் செய்தியாளர் டேவிஸ், அரசியல் ஆய்வாளர் என்று தன்னைத் தானே கூறிக்கொள்ளும் தயான் ஜயதிலகவைப் பேட்டி காணுகின்றார். தயான் ஜயதிலக கூறுகின்றார் ஜனநாயகத் தலைவர்கள் பலரது படுகொலைக்கு புலிகளே காரணம் என்று. ஆனால் இங்கு எமது செய்தியாளர் மீளவும் கவனத்திற்கு எடுக்கவேண்டியது என்னவெனில் இப்போதைய சிறீலங்கா ஜனாதிபதியினது தந்தையாரைக் கொன்றது புலிகள் அல்ல புத்த பிக்குவே, சந்திரிகாவின் கணவரும், ஜயதிலகா ஆலோசகராக விளங்கிய கட்சியின் தலைவருமான விஜயகுமாரதுங்கா சிங்களவராலேயே படுகொலை செய்யப்பட்டார். இவை யாவும் அரசியல் விமர்சகரான தயான் ஜயதிலகாவின் ஞாபகத்தில் இல்லாமல் போனது வியப்பாகவுள்ளது.

புலிகளை டேவிஸ் அவர்கள் நிழல் பயங்கரவாதக் குழு என வர்ணிக்கின்றார். என்னால் அவர்கள் மீது நிழலாக எதுவும் கூற முடியாதுள்ளது. தற்போதய ஜனாதிபதி கடந்த காலங்களில் அவரது கணவருடன் வடக்கிற்கு சென்றுவந்தபோது ஏதாவது பிரச்சனைகள் அவர்களால் ஏற்பட்டதா? சர்வதேசக் கண்காணிப்புக் குழு யாழ் சென்றபோது, ஏன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள், இப்போதை ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்ட பெந்தி ஆகியோரெல்லாம் யாழ் சென்று வந்தபோது புலிகள் நிழல் நடவடிக்கை பற்றி ஏதும் குறிப்பிடவில்லை. அவர்கள் திறந்த மனதுடனேயே அரசாங்கத்துடன் நடந்து கொண்டார்கள். ஆனால் அவர்கள் மர்மமான முறையில் நடக்கின்றார்கள் என்று குறிப்பிடுவது ஆச்சரியமானது. இவ்வாறான பக்கச்சார்பான ஊடகவியல் எதனையும் சாதிக்கப் போவதுமில்லை, எதனையும் பெற்றுத் தரப் போவதுமில்லை.

எண்ணிக்கையிற் சிறிய தேசிய இனமான தமிழர்கள் இன ஒதுக்கலிலிருந்து மீளப் போராடுவதாகக் குறிப்பிடும் டேவிஸ், ஆயிரக்கணக்கானவர்களை போராளிகள் அரசுக்கெதிரான போரில் கொல்வதாகக் குறிப்பிட்டுள்ளார். போராளிகள் கொல்லும் உயிருக்கு சிங்கள ஆயுதப் படைகள் பத்துப் பேரைக் கொல்கின்றார்கள். கிரகாம் டேவிஸ் நீங்கள் நிறைய இப்பிரச்சினை சம்பந்தமாக ஆழமாக ஆராயவேண்டும். உலகப் பரப்பெங்கும் சிதறி வாழும் ஐந்து இலட்சம் தமிழர்கள் ஏன் அவ்வாறு வாழ்கிறார்கள் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

டேவிஸ் தொடர்கிறார், தமிழீழ விடுதலைப் புலிகள்தான் ஒருபோதும் பேச்சுவார்த்தைக்கு வர மறுக்கிறார்கள் என்று. திம்புப் பேச்சுவார்த்தையில் புலிகள் இயக்கம் கலந்து கொள்ளவில்லையா? அவர்கள் பல பேச்சுவார்த்தை மேசைகளில் கலந்து கொண்டார்கள். சந்திரிகா அம்மையாருடனான பேச்சுவார்த்தையிலும் 1995இல் கலந்து கொண்டார்கள் அல்லவா. டேவிஸ் நீங்கள் விளங்கிக் கொண்டது அனைத்துமே பிழையானவை.

விடுதலைப் புலிகள் சுதந்திரத்தைத் தவிர வேறு ஒன்றையும் ஏற்கமாட்டார்கள் என்று குறிப்பிடப்படுகின்றது. உண்மையே அண்மையில் கிழக்குத் திமோரில் நடந்தது என்ன? 20 வருடங்களாகத் தமிழர்கள் தமது உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஒரு கரந்தடி போராட்டக் குழு எவ்வாறு மரபு வழி இராணுவமாக வளர்ந்து, அரச தரப்புப் படைகளுக்குச் சவாலாக சமர்புரிகின்றனர். கனரக ஆயுத தளபாடங்கள் வைத்திருக்கின்றனர் என்ற கேள்வி நிகழ்ச்சியில் எழுப்பப்பட்டது. ஆனால் இதற்குப் பதில் வழங்கப்படவில்லை. ஆனால் என்னால் அதற்கு பதில் வழங்க முடியும். புலிகள் மேற்கு நாடுகள் சிறீலங்காவிற்கு வழங்கிய ஆயுதங்களில் இருந்துதான் வளர்ந்தார்கள். இதற்கு முதலில் புலிகள் மேற்கு நாடுகளுக்கு நன்றி கூறவேண்டும். 1996இல் முல்லைத்தீவு முகாமிலிருந்து அண்மைய ஆனையிறவுத்தளம் வரையான முகாம்களின் தகர்ப்பின்போது பெருந்தொகை நவீன ஆயுத தளபாடங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இவை அவர்களுக்கு அடுத்து வரும் பத்து வருடங்களுக்குப் போதுமானவை.

எங்கள் ஊடகவியலாளர் மாதாந்தம் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்படுவதாகக் கூறும் 4 மில்லியன் டொலர் சம்மந்தமான விடயத்திற்குச் செல்கின்றார். விடுதலைப் புலிகள் சம்மந்தமான விடயங்களில் வலு கெட்டித்தனமான உளவாளி என்று குறிப்பிடும் குணரட்ணவின் ஏலவே தயார்ப்படுத்தப்பட்ட பேட்டியில் வெளிநாடு வாழ் தமிழர்களிடம் நியம தொகை அறவிடப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. றோகான் குணரட்ண காட்டுமிராண்டித் தனமாகப் பேசுகின்றார். அவுஸ்திரேலியாவில் நான் வாழ்கின்ற நகரமாகிய பிறிஸ்பன் உட்பட அவுஸ்திரேலியாவில் வாழும் பல தமிழர்களை நான் அறிவேன் அவர்கள் எவரும் நிர்ணயிக்கப்பட்ட தொகை எதுவும் செலுத்தியதாகக் கூறவில்லை. இங்கே நினைவுபடுத்தத் தக்கது என்னவெனில் எனது மனைவியும் ஒரு வேலைக்குப் போகும் தமிழிச்சியாவார்.

இதே விடயத்தை மறுவளமாகப் பார்த்தால் சிறீலங்கா அரசானது யுத்தத்திற்கு எங்கிருந்து நிதியைப் பெறுகின்றது? வருமான வரி விதிப்பதன் மூலமே திரட்டப்படுகின்றது. சிறீலங்காவில் வாழ்கின்ற தமிழர்கள் தமது சகோதரர்களைக் கொல்லும் யுத்தத்திற்கு மனப்பூர்வமாக வரியிறுக்கின்றார்கள் என்று நினைக்கிறீர்களா? சிறீலங்கா அரசு விருப்பின்றி தமிழர்களிடம் அறவிடுகின்ற வரியானது சட்டரீதியானது சரியானது என்று கருதப்படுகின்றது. வெளிநாட்டில் வாழ்கின்ற தமிழர்களுக்கு தெரிவு செய்யும் உரிமை இருக்கின்றது. அவர்களால் சிறீலங்கா அரசுக்குப் போகும் வரி நீதியற்றதாகக் கருதப்படுகின்றது. அதேவேளை புலிகளுக்கு மனப்பூர்வமாகப் போகும் பணம் நீதியானதாகக் கருதப்படுகின்றது.

அதுசரி றோகான் குணரட்ண புலிகளுக்கான விவகாரங்களுக்கு உலகளாவிய அங்கீகாரத்தை எங்கு பெற்றார். ஸ்காட்லாந்திலுள்ள புனித அன்றூ பல்கலைக்கழகத்திலா? எனக்குச் சிரிப்பை ஏற்படுத்தாதீர்கள். என்னால் புரிந்துகொள்ள முடியாமல் இருந்தது நான் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருப்பது ஒரு நகைச்சுவைத் தொடரா என்பதை. நான் கஸ்டப்பட்டுச் சேகரித்த பணத்தைச் செலவழித்து றோகான் குணரட்ணவின் போரும் சமாதானமும் சிறீலங்காவில் (War and peace in Sri Lanka) எனும் புத்தகத்தை 1987இல் வாங்கினேன். எனது பணத்தை நான் வீண் விரயம் செய்துவிட்டேன்.

டேவிஸ் அவர்கள் அடுத்ததாக ஜே.ஆர் ஜெயவர்த்தனா கனடாவில் கலந்துகொண்ட ஒரு பத்திரிகையாளர் மாநாடு சம்மந்தமாகக் குறிப்பிடுகின்றார். அதன்போது பத்திரிகையாளர்கள் ஜே.ஆரிடம் கனடாவிலுள்ளது போன்று சமஸ்டி ஏன் அமைக்கக்கூடாது என்றதற்கு, நீங்கள் கனடியர்களாக இருப்பதால் உங்களுக்கு இலகுவாக இருக்கின்றது என்று கூறினாராம். நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளரான டேவிசோடு ஒரு காலத்தில் சிறீலங்காவின் தேசிய பந்தோபஸ்த்து அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலியும் ஒன்றாகப் படித்தவர்கள். அதன்போது டேவிஸ் அத்துலத் முதலியிடம் வினவினாராம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுதான் என்னவென்று. அதற்கு அத்துலத் முதலியவர்கள் தமிழர்களின் தலைகள் பந்தாடப்பட வேண்டும் என்று கூறினாராம். அதாவது என்ன அர்த்தமற்ற விடயங்கள் பேசப்பட்டாலும், எழுதப்பட்டாலும் அதனைக் கருத்திலெடுக்க வேண்டும் என்பது டேவிஸ்சின் நோக்கமாக இருக்கின்றது. இது நடைமுறைக்குப் புறம்பானது.

டேவிஸ் இந்நிகழ்ச்சியிலே கனேடியன் தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவரைப் பேட்டி காணுகின்றார். அந்தப் பிரமுகர் ஒரு புலிகளின் ஆதரவாளர். பேட்டியின்போது அவர் நாங்கள் ஆதரவளிப்பதாக் கூறுவதன் அர்த்தம் எங்களுடைய உரிமைகளை மீள எடுப்பதுவே, அதாவது எங்களுடைய சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதாகும் என்று கூறுகின்றார். அதன்போது டேவிஸ் எதுவரைக்கும் இந்த யுத்தத்தை ஆதரிப்பீர்கள் என்று வினவுகின்றார். அதற்கு அந்தத் தமிழர் நேரடியாகப் பதிலளிக்கவில்லை. ஆனால் என்னால் சரியான பதிலை வழங்க முடியும். புலிகளை வெல்ல முடியாத இந்தப் போரில் இறுதியல் நாடு குட்டிச்சுவராகிய பின்னரே இந்த யுத்தம் முடிவுக்கு வரும் என்பதே ஆகும்.

> வெளிநாட்டில் வாழ்கின்ற தமிழர்களுக்கு தெரிவு செய்யும் உரிமை இருக்கின்றது. அவர்களால் சிறீலங்கா அரசுக்குப் போகும் வரி நீதியற்றதாகக் கருதப்படுகின்றது. அதேவேளை புலிகளுக்கு மனப்பூர்வமாகப் போகும் பணம் நீதியானதாகக் கருதப்படுகின்றது.

டேவிஸ் தம்முடைய நிகழ்ச்சிக்காக மிதமிஞ்சிய பிரயாணங்களை மேற்கொண்டிருந்தார் அதன் ஒரு கட்டமாக கனடாவின் மக்கன்சி போதனாசாலைக்கு விஜயம் செய்தார். கனடாவில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் குற்றங்கள் சம்மந்தமாக ஆய்வில் ஈடுபடும் இயக்குனர் ஜோன் தோம்சனிடம் பேட்டி காணப்படுகிறது. தோம்சன் சில போலியான குற்றச்சாட்டுக்களை புலிகள் மீது சுமத்தியுள்ளார். இதன்போது தோம்சன் ஒன்றை மறந்துவிட்டார். 1983இல் ஜே.ஆர் அரசாங்கத்தினால் படுகொலை செய்யப்பட்ட 3000 தமிழர்கள் தொடர்பில் எதுவுமே கூறவில்லை. இவருடைய பேட்டியானது மக்கன்சி நிறுவனத்தின் நம்பகத்தன்மையையே கேள்விக்குறியதாக்கிவிட்டது.

தோம்சன் நிறுவனமயப்படுத்தப்பட்ட குற்றச் செயல்கள் சம்மந்தமாக பிரஸ்தாபித்துள்ளார். இப்போது நிறுவனமயப்படுத்தப்பட்ட குற்றச்செயல்கள் அனைத்தும் கொழும்பிலே மையங் கொண்டுள்ளன என்பதை திருவாளர் தோம்சன் அறியவில்லையா. ஆயுத முகவர்களும், போதைப் பொருள் விநியோகஸ்த்தர்களும் கொழும்பையே சுற்றி வருவது அவருக்குத் தெரியாதா?.

என்னைப் பொறுத்தவரையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் குறித்து திரு.டேவிஸ் மேற்கொண்டுள்ள ஆய்வு கீழ்த்தரமானது. வெட்கக்கேடான ஊடகவியலுக்கு உதாரணமானது. இதை வர்ணிப்பதற்கு எனக்கு வேறு வார்த்தைகள் கிடையாது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தில் அங்கம் வகிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் மருத்துவர்கள். இவர்களில் பலர் நான் கண்டிப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய வேளையில் எனது மாணவர்களாக இருந்தவர்கள். ஏதிலிகளையும், போரில் தாய் தந்தையரை இழந்த சிறுவர்களையும் பராமரிக்கின்ற இந்நிறுவனம் சம்மந்தமாக அவதூறை இந்நிகழ்ச்சி சிந்தியுள்ளது. இந்நிறுவனம் சம்மந்தமாக இல்லாததும் பொல்லாததும் குறிப்பிடுவது எனது இரத்தத்தை கொதிக்க வைக்கின்றது.

அவுஸ்திரேலியாவிற்கான இலங்கைத் தூதுவரின் கருத்துக்கள் குறித்து எதுவித கருத்தையும் நான் கூற விரும்பவில்லை. ஏனெனில் அவர் சம்பளத்திற்காக வேலை செய்பவர். அவரிடம் நாம் உண்மையை நீதியை எதிர்பார்க்க முடியாது.

வயது முதிர்ந்தவரும் மிகுந்த மரியாதைக்குரியவருமான பேராசிரியர் எலியேசருடனான பேட்டி கண்ணியமானதாக நடைபெறவில்லை. நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் டேவிஸ் அவர்களுக்கு இது வெகு நன்றாகவே தெரியும். எலியேசர் ஒரு சுர்மதி மிக்க கணிதவியலாளர், அவுஸ்திரேலிய லாதுறோப்பே பல்கலைக் கழகத்தின் முன்னாள் பேராசிரியர். 34வயதில் பேராசிரியராக இருந்து புகழ் பெற்றவர். அவருடைய பணிக்காக அவுஸ்திரேலிய அரசானது கௌரவித்துள்ளது. ஒரு அற்பத்தனமான ஊடகவியலாளர் அதுவும் உலகப்பரப்பில் விடுதலைப் புலிகளோடு தொடர்புபடுத்திக் குறிப்பிடலாம். திரு. டேவிஸ் வெறுமனே பேராசிரியர் எலியேசரை அவமதிக்கவில்லை. அத்தோடு அவுஸ்திரேலிய விருது வழங்கும் சபையையே அவமதித்துள்ளார்.

அவுஸ்திரேலிய சுகாதார அமைச்சர் மைக்கல் வூட்றிஜ் பேராசிரியர் எலியேசருக்கு விடுதலைப் புலிகளின் தலைவரால் விருது வழங்கப்பட்டதற்கு எடுக்கப்பட்ட விழாவில் கலந்து கொண்டமைக்காக விமர்சிக்கப்பட்டுள்ளார். டாக்டர் வூட்றிஜ் இந்நிகழ்ச்சிக்குப் பேட்டி அளிக்க மறுத்துவிட்டார். அவர் செய்தது சரியே. தனது தொகுதியில் வாழும் மக்களின் விழாவில் கலந்து கொண்டது தப்பல்லவே.

நாங்கள் இப்போது 1991இல் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதிற்கு வருவோம். நான் அதனை முற்று முழுதாக ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் துன்பத்தனமாக 1987இல் ஜே.ஆரால் இலங்கைப் பிரச்சினைக்கு ராஜீவ் இழுத்து வரப்பட்டார். அவருடைய வழிகாட்டலில் இந்திய இராணுவத்தினரால் பெருந்தொகையான பெண்களும் குழந்தைகளும் தமிழர் வாழிடம் எங்கும் கொலைப்பட்டார்கள். அதற்கான விலையை அவர் பெற்றார்.

இறுதியாக நாங்கள் மிகப்பாரதூரமான முறையில் இலங்கைப் பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ளோம். இந்த யுத்தம் காரணமாக இலங்கையின் மக்கள், பொருளாதாரம் என்பன சிதைக்கப்பட்டு வருகின்றன. எங்களுக்குத் தேவை ஆரோக்கியமான பிரச்சினையின் ஆழத்தைப் புரிந்து கொண்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளே. ஆனால் கடந்த 04.10.2000 அன்று காட்டப்பட்டதைப் போன்ற நிகழ்ச்சி பிரச்சினையை வெளிப்படுத்தாது பிரச்சினையின் கனதியை திசை திருப்புவதாகவே இருக்கும். இது போன்ற நிகழ்ச்சி கடந்த 25 வருட அவுஸ்திரேலிய வாழ்க்கையில் நான் பார்க்கவில்லை. இது போன்ற விபரீத விளையாட்டு இனியும் வேண்டாம்.

முற்றும்

# சமாதானம் மீதான ஆர்வமும் போர் மீதான வெறியும்

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்களையும் வசதிகளையும் வளர்க்குமுகமாகவும் ஓர் நல்லெண்ண அறிகுறியாகவும் இந்தப் பண்டிகைக்காலத்தில் ஒரு மாதகால ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தமொன்றை தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் அறிவித்திருந்தார். நத்தார், புத்தாண்டு, பொங்கல், ரம்ழான் பண்டிகைகளை உள்ளிட்ட புனிதகாலமான, டிசம்பர் 24ஆம் திகதியிலிருந்து சனவரி 24ஆம் திகதி வரைப்பட்ட காலத்தை, போர்நிறுத்த காலமாகப் பிரகடனப்படுத்திய விடுதலைப் புலிகள் அதனைக் கடைப்பிடித்தும் வருகின்றனர். சமாதானப் பேச்சுவார்த்தை நோக்கிய நகர்வில் நல்லெண்ண சமிக்ஞையாக இதனை இனங்கண்டுகொண்ட சர்வதேசம் இதனைப் பெருமகிழ்வுடன் வரவேற்றது. ஆனால் சிங்களமோ இதனை நிராகரித்தது. இந்தப் போர்நிறுத்தம் சூழ்ச்சிகரமானது என, இல்லாத பொல்லாத கற்பனைக் கதைகளை அது தெரிவிக்கின்றது. நல்லெண்ண சமிக்ஞை தேவையில்லை, யுத்தநிறுத்தத்திற்குச் சம்மதியோம் எனக் கூக்குரல் இட்டுவருகின்றது. சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு குறித்து அக்கறைப்படவில்லை எனத் தெரிவித்து, தனது போர் வெறியை வெளிப்படுத்திக் கொண்டது. விடுதலைப் புலிகளின் போர்நிறுத்தத்தை ஆதரித்து, பல தரப்பினரும் கூறிய கருத்துக்களை இங்கு பதிவு செய்கின்ற அதே நேரத்தில் சிங்களத்தின் சமாதானத்திற்கு எதிரான கூச்சலையும் இங்கு பதிவு செய்கின்றோம். இதுவரைகாலமும் உலகை ஏமாற்றி வந்த சிங்களத்தின் இனஅழிப்பு நோக்கத்தைத் தோலுரித்துக் காட்டவேண்டியது நமது கடமை. விடுதலைப் புலிகளின் சமாதானத்திற்கான ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்த அறிவிப்பை, உலகமே வரவேற்க, சிங்களமோ போர்க்கொடி தூக்குகின்றது. சிங்களத்தின் பலதரப்பட்ட நிலைகளில் உள்ளவர்களால், சமாதானத்திற்கு எதிராகக் கூறப்பட்டுள்ள கருத்துக்களை பதிவு செய்கின்றோம். இனியாவது உலகம் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் தார்மீக நியாயத்தைப் புரிந்து கொள்ளட்டும்.

## போர்நிறுத்தத்திற்கு ஆதரவான குரல்கள்

### சமாதானத் தீர்வு குறித்து உடனடியாகப் பேசுங்கள்

**ஐரோப்பிய ஒன்றியம்**

இராணுவச் செலவீனங்களுக்காக இலங்கை அரசு இதனது வரவு செலவுத் திட்டத்தில் பெரும் தொகைப் பணத்தை ஒதுக்குகின்றது. இதனால் நாட்டின் அபிவிருத்திப் பணிகள் தடங்கலாகின்றன. எனவே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக விடுதலைப் புலிகளுக்கு சமர்ப்பிக்கவிருக்கும் சமாதானத் தீர்வுத்திட்டம் தொடர்பில் பொது இணக்கப்பாட்டிற்கு ஒட்டுமொத்த சிங்கள சமுதாயமும் வரவேண்டும். ■

### விடுதலைப் புலிகளின் செயற்பாட்டை வரவேற்கிறேன்.

நோர்வே நாட்டின் இலங்கை இனப்பிரச்சினைக்கான சிறப்புப் பிரதிநிதி திரு. எறிக் சுல்கைம்



மிக அண்மைக்கால சமாதன முயற்சிகள் ஊக்க மளிக்கின்றன. இருந்தபோதும் இப்பிரச்சினையில் இருதரப்பினருக்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படுகின்றது. இப்பொழுது சாதகமான காட்சிகள் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தோற்றம் கொள்ளத் தொடங்கிவிட்டன. விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ள உருப்படியான வேலைத்திட்டம் இது. விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள ஒருதலைப்பட்ச போர்நிறுத்த அறிவிப்பை வெகுவாகப் பாராட்டுகின்றேன். இதுகுறித்த சிறீலங்காவின் அசமந்தப் போக்குக் குறித்து என்னால் குறிப்பிட முடியாது ஏனெனில் இது விடயத்தில் நான் மத்தியஸ்தராகக் கடமையாற்றுகின்றேன். ■


### அரசியல் தீர்வு தேவையாக உள்ளது

ஐ.தே.கட்சியின் பேச்சாளரும், களுத்துறை மாவட்ட எம்பியுமான மகிந்த சமரசிங்கா

எங்களுக்கு அரசியல் தீர்வு தேவையாக உள்ளது இப்பொழுது அரசாங்கத்திடம் பந்து உள்ளது உண்மையில் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்காக இறங்கி வந்துள்ளனர். இப்பேச்சுவார்த்தை முயற்சிகளையிட்டு அரசாங்கம் ஏன் பின்வாங்குகின்றது என்பது தெரியவில்லை. ஏனெனில் விடுதலைப் புலிகள் இம்முயற்சிகளில் இருந்து பின்வாங்கினால் சர்வதேச நாடுகள் மூலமாக அவர்களுக்கு அழுத்தம் கொடுக்கலாம். அரசாங்கம் முதலில் சர்வதேச சமூகத்தின் போக்கை, விருப்பை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அதுவும் சிறீலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் விருப்பை புரிந்து கொள்ளவேண்டும். அவர்கள் எம்மைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ■

### சிறீலங்கா அரசை வன்மையாகக் கண்டிக்கின்றேன்

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. வைகோ



சிறீலங்கா அரசானது விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்சமான போர்நிறுத்த அறிவிப்பை நிராகரித்ததை வன்மையாகக் கண்டிக்கின்றேன். சிறீலங்கா அரசு இனப்படுகொலை நோக்கிலேயே போர்நிறுத்தத்திற்கு வர மறுக்கின்றது. விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச போர்நிறுத்த அறிவிப்பின் பின்னரே சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்கள் மீதான வன்முறைகளை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. நான் சிறீலங்கா அரசாங்கத்திடம் இருந்து தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. ■

### உருப்படியான தீர்விற்கு வருவதற்கு சிறீலங்கா அரசிற்கு இஸ்டமில்லை.

தமிழகப் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டாக்டர் இராமதாஸ்



தமிழீழ விடுதலைப் புலிகள் போர்நிறுத்தத்தை அறிவித்துள்ளனர். அதனைப் பயன்படுத்தி பேச்சுவார்த்தை முயற்சியில் ஈடுபட்டு தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் சிறீலங்கா அரசிற்கு ஆர்வமில்லை. இந்திய மத்திய அரசானது சிறீலங்கா அரசைப் போர்நிறுத்தத்திற்குச் சம்மதித்து ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையில் ஈடுபட அழுத்தம் கொடுக்க வேண்டும். அது தவறும்பட்சத்தில் பங்களாதேசினைப் பிரித்தது போல ஈழத் தமிழரின் தாயகத்தை தனிநாடாக்க இந்தியா உதவவேண்டும். ■

### தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பையடுத்து சமாதான ஒளிக்கீற்று தென்படுகிறது

மட்டக்களப்பு திருமலை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பையடுத்து சமாதானத்திற்கான ஒளிக்கீற்று எம் வாழ்வில் வீசுவதற்கான சந்தர்ப்பம் வாய்த்துள்ளது. அப்பாவி மக்களின் அழிவுகளின்மேல் போரை மையமாகத்து வீரம் பேசுவதைவிடுத்து ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் உடன் இறங்க வேண்டும். அரசு விடுதலைப் புலிகளின் அறிவிப்பை ஏற்பதோடு சகல தரப்பினரும் சமாதானத்திற்காக முனைப்போடு செயற்பட வேண்டும். ■

### சிறீலங்கா அரசு இதயசுத்தியோடு தமிழர் பிரச்சினையைக் கையாள வேண்டும்.

மன்னார் ஆயர் இராஜப்பு ஜோசப்பு



தமிழ் மக்கள் தன்னாட்சி உரிமை கொண்ட ஓர் தனியினம். இந்த இன உரிமையைப் பயன்படுத்தி, அவர்கள் தங்கள் பாரம்பரிய பிரதேசத்தில், தம்மைத் தாமே ஆண்டு வளர்ச்சியடைய உரிமையுடையவர்கள். இந்த உண்மையின் பின்னால், உலகத் தமிழினம் இன்று அணிவகுத்து நிற்கின்றது. தென்னிலங்கை அரசியல்வாதிகள் இந்தப் பேருண்மையை புரிந்து கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகள் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு இணங்கிப் போர்நிறுத்தத்தை இதயசுத்தியோடு அறிவித்திருக்கின்றார்கள். சிறீலங்கா அரசு இதனைத் தொடர்ந்து செல்ல வேண்டும். ■

### பேச்சுவார்த்தையின்போது போர்நிறுத்தம் பேணப்பட வேண்டும்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி



பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னால் இருதரப்பாருக்குமிடையே போர் ஓய்வு என்பது அத்தியாவசியமானது. ஏனெனில் இது போரிடும் இருதரப்பாரையும் புரிந்துணர்வுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு ஏதுவாக அமையும். உடனடியாக அரசானது யுத்தநிறுத்தத்திற்குச் சம்மதித்து பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்வரவேண்டும். நாங்கள் எப்போதும் வலியுறுத்தி வருகின்ற திம்புக் கோட்பாடுகளில் இருந்து ஆரம்பிக்கப்படும் தீர்வு முயற்சிகளே ஆக்கபூர்வமானவையாக அமையவல்லவை. ■

### நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையின் முதற்படி

பீற்றர் கெயின், பிரித்தானிய வெளிவிவகார துணை அமைச்சர்.



விடுதலைப் புலிகளின் நிபந்தனையற்ற போர்நிறுத்தத்தை நான் வரவேற்கிறேன். இது உண்மையான போர்நிறுத்தமாகவும், கடைப்பிடிக்கப்படும் போர்நிறுத்தமாகவும் இருக்கும் என்று நம்புகின்றேன். முன்நிபந்தனையற்ற சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கான முதல்படி. ■

## அரசு சாதகமான பதிலை வழங்க வேண்டும்

### சந்திரிகா அரசின் அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான ஆறுமுகம் தொண்டமான்

புலிகள் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை அறிவித்தவுடனேயே அரசு சாதகமான பதிலை வழங்கியிருக்க வேண்டும். இதுவே இ.தொ.காவின் கருத்து. பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கான ஒரு சூழலை உருவாக்கும் நோக்குடன் புலிகள் மேற்கொண்ட இந்த நடவடிக்கையை கருத்திற்கொண்டு அரசும் சாதகமான பதிலை வெளிக்காட்ட வேண்டும். அத்தோடு புலிகளின் யுத்த நிறுத்தத்திற்கு சாதகமான பதிலை சிறீலங்கா அரசு வழங்கவேண்டும் என சர்வதேச சமூகமும் அழுத்தம் கொடுக்க வேண்டும். ■

## எதிர்த்தரப்பு பலவீனமான நிலையில் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என எதிர்பார்ப்பது ஒரு இதயசுத்தியான நோக்கமல்ல.

### வர்த்தக வாணிபக் கப்பல்துறை அமைச்சர் திரு. ரவூப் ஹக்கீம்

சிறீலங்கா அரசாங்கம் தான் ஒரு பலமான தளத்தில் இருந்து பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று நினைப்பது சரியான ஒன்று அல்ல. தனது எதிர்த்தரப்பு பலவீனமான நிலையில் இருக்கும்போது பேச்சுவார்த்தைக்குப் போகவேண்டும் என எதிர்பார்ப்பது ஓர் இதயசுத்தியான பேச்சை ஆரம்பிப்பதற்குரிய நிலைப்பாடு அல்ல. அவ்வாறு பலவீனமான நிலையில் இருக்கும் தரப்பு ஒருபோதும் பேச்சுவார்த்தை மேசைக்கு வரப்போவதுமில்லை. எனவே இரு தரப்பினரும் சமபல நிலையில் இருக்கும்போது நடைபெறும் பேச்சுவார்த்தை நல்ல பலனைத் தரும். இனப்பிரச்சினைத் தீர்விற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை பொ.ஐ முன்னணி அரசு இன்னும் 6 மாதத்திற்குள் மேற்கொள்ளாவிட்டால் நாடு சீரழிவதை யாராலும் தடுக்க முடியாது. ■

# போர் நிறுத்தத்திற்கு எதிரான பேரினவாதக் கூச்சல்கள்

## தாக்குதலைத் தொடர்ந்து நடத்துங்கள்

பயங்கரவாதத்திற்கு எதிரான அமைப்பு என்ற சிங்களப் பேரினவாத அமைப்பு கடந்த 21.12.2000 அன்று கொழும்பு கோட்டை புகையிரதநிலைய முன்றலில் போரைத் தொடர்ந்து நடத்த வேண்டும் எனக்கோரி ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளது. இதன்போது முப்படைத் தளபதிகளுக்கும் போரை உத்வேகத்துடன் தொடருமாறு கோரிய வேண்டுகைக் கடிதம் ஒன்று இவ்வமைப்பால் விடுக்கப்பட்டுள்ளது. அதன் சாரம் வருமாறு.

செச்சினிய போராளிகளைத் தோற்கடிக்கும் வரை பேசுவதில்லை என முடிவெடுத்து ரஸ்சிய இராணுவம் உறுதியுடன் செயற்பட்டதாலேயே இன்று செச்சினியப் போராளிகள் தோற்கடிக்கப்பட்டுள்ளனர். அதுபோல சிங்கள இராணுவம் உறுதியுடன் போராட வேண்டும். அரச சார்பற்ற நிறுவன மாபியாக்களும், செய்தித்துறை ஊடகங்களில் ஒரு பிரிவினரும் திட்டமிட்டு இராணுவத்தின் மன நிலையைச் சிதைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளன. இராணுவத்தின் மனோவியல் பிரிவினருக்கு சமத்துவம் மற்றும் சமரசம் பற்றிப் போதிக்கும் கெட்ட புத்திஜீவிகளின் விரிவுரைகள் நிறுத்தப்பட வேண்டும். இவ்வாறு ஈழக் கோரிக்கைகளுக்குச் சாதகமாக வேலை செய்யும் அனைத்து நடவடிக்கைகளும் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

இன்று நாடானது பெரும் இக்கட்டான நிலைக்கு உள்ளாகியிருக்கின்றது. அரசானது சமாதானம், பேச்சுவார்த்தை போன்ற தவறான முடிவுகளை எடுத்துவிடுமாயின் நாடு வெகு இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும். ஒட்டுமொத்த தேசத்தின் வாழ்வே உங்களின் கையில் தங்கியுள்ளது.

ஏனெனில் இப்பொழுது அரசும், எதிர்க்கட்சியும் மீளவும் பேச்சுவார்த்தை சம்மந்தமான முயற்சிகளை முன்னெடுக்கப் போவதாகக் கூறுகின்றனர். இம்முன்னெடுப்புக்கள் சிங்களப் பாதுகாப்புப் படைகளின் அர்ப்பணிப்பை கேள்விக்குள்ளாக்கவல்லவை. எமது படையினர் சிந்திய இரத்தத்திற்குப் பதில் என்ன?

கடந்த பேச்சுவார்த்தை, சமாதானம் முதலான பெயர்களில் புலிகளே பலனடைந்தனர். இன்னுமொருமுறை இவ்வாறு நடைபெற நாம் அனுமதிக்கக்கூடாது கடைசிப் புலி கொல்லப்படும் வரை போரைத் தொடர்ந்து நடத்த வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் புலிகளை ஒருபோதும் பலவீனப்படுத்தாது மாறாக பலப்படுத்தவே செய்யும். மத்தியஸ்துவத்திற்கு வந்துள்ள மேற்கு நாடுகளுக்கு இலங்கைத்தீவில் வாழும் சிங்கள மக்கள்மீது அன்பில்லை. அவர்கள் புலிகளுக்கு ஆதரவளிக்கின்றார்கள், நிதியளிக்கின்றார்கள். ■

## வடக்குக் கிழக்கை விட்டுத்தரத் தயாரில்லை

### குருப்பிட்டிய சிறி சங்காராம விகாராதிபதி தல கொட ஞானேஸ்வர தேரர்

அரசியலில் பௌத்த பிக்குகள் ஈடுபடுவதும் போரைத் தொடர்ந்து நடத்துமாறு கூறுவதும் பௌத்த மதத்திற்குப் பொருந்துமா என்று சிலர் வினாவுகின்றனர். ஆனால் அவர்களின் கூற்றுப்படி பௌத்தமதம் கூறுவதை மட்டும் செய்வதானால் பிரபாகரனைக் கூட்டிவந்து அவரது தலையில் நீரை ஊற்றி ஆசீர்வதித்து வடக்குக் கிழக்கை தாரை வார்த்துக் கொடுப்பதை மாத்திரமே எம்மால் செய்ய முடியும். ஆனால் பௌத்தம் என்ற ஒன்றிற்காக எமது நாட்டை விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை. இங்கு நடப்பது போரல்ல கொலைகாரப் பயங்கரவாதத்தின் ஒரு பகுதியே. எனவே எமக்கு இப்பொழுது தேவை சமாதானம் அல்ல பயங்கரவாத ஒழிப்பே. ■

## பிரிவினைவாதம் அழிக்கப்படும் வரை போர் தொடரும்

### சிறீலங்கா இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் பலகல்ல



பிரிவினைப் பயங்கரவாதத்தை பூண்டோடு அழிக்கும் வரை போரைத் தொடர்வோம். எமது படைகள் புலிப் பயங்கரவாதத்தை அழித்து சமாதானப் பாதையை நீட்டிச் செல்கின்றன. இப்போது வெற்றிகள் படைக்கும் களத் தளபதிகளை வாழ்த்துகிறேன். எமது சிறீலங்கா மக்கள் அமைதியாக சமாதானமாக வாழவே போராடுகிறோம். இன்னும் புதிய ஆயுதங்கள் கைக்குவரின் வெகுவிரைவில் சிறீலங்கா மக்கள் சமாதானக் காற்றைச் சுவாசிப்பர். போர் நடவடிக்கை தொடரும். ■

## எமது சிங்கங்களின் மனத்தைரியத்தைக் குலைக்க வேண்டாம்

### பேராசிரியர் சி.எம். மட்டும்பண்டார

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

புலிகள் பேச்சு சம்மதிக்கின்றார்கள் என்றால் அவர்கள் எமது படைகளுக்கு முகங்கொடுக்க முடியாமல் திணறுகின்றார்கள் என்று அர்த்தம். தயவுசெய்து எமது படையினர் உளவியல்ரீதியாகப் பாதிக்கப்படுவதற்கு இடம் கொடுத்துவிடாதீர்கள். ஏனென்றால் அவர்கள் புலிகளின் நகங்களுக்கும் பற்களுக்குமிடையில் நின்று போராடிக் கொண்டிருக்கின்றார்கள். ■

## சிறீலங்காவின் சுயாதீனத்திற்குள் எவரும் தலையிடக்கூடாது

### மக்கள் விடுதலை முன்னணியின்(ஜே.வி.பி) பொதுச் செயலாளர்

சமாதானம் என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் சதிக்குள் நாங்கள் சிக்கிக்கொள்ள மாட்டோம். நாட்டின் ஒரு பகுதி பிரிந்து செல்வது எதிரியின் வெற்றியும் ஏகாதிபத்தியத்தின் வெற்றியுமாகும். சிறீலங்காவின் சுயாதீனத்திற்குள் எவரும் தலையிடக்கூடாது அதனை நாம் முற்றாக எதிர்ப்போம்.

நாங்கள் சமாதானத்தின் எதிரிகளல்ல. ஆனால் இப்போது எடுக்கப்படும் சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகள் உண்மையானவை அல்ல. இவை யாவும் ஏகாதிபத்தியவாதிகளின் ஓர் சதித்திட்டம். இன்று எமது தேசத்தை சந்திரிகாவோ அல்லது அவரது கட்சியோ ஆட்சி செய்யவில்லை. ஏகாதிபத்தியவாதிகள்தான் ஆட்சி செய்கின்றனர். நோர்வே போயர்கள் மீது நாம் வைத்திருந்த நம்பிக்கையை அவர்கள் உடைத்துவிட்டார்கள். 1984இல் இருந்து 1994 வரை எத்தனையோ பேச்சுவார்த்தைகள் நடந்துவிட்டன. எந்த நன்மையும் ஏற்படவில்லை. எனவே நோர்வேயின் இந்த முயற்சியும்



சமாதானத்தைக் கொண்டு வரப்போவதில்லை. எமது நாட்டு விவகாரத்தில் வேறு எவரும் தலையிடக்கூடாது. அதற்கு நாம் முழு எதிர்ப்பைக் காட்டுவோம். எமக்கு தேசிய சுதந்திரம் இன்னும் கிடைக்கவில்லை. இன்றுவரை ஏகாதிபத்தியவாதிகளிடம் அடிமைப்பட்டே இருக்கின்றோம். ■

# பல நாக்குகளில் உளறும் சந்திரிகாவின் அமைச்சரவை.

## அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் போர்நிறுத்தம் சாத்தியமில்லை.

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை



சிறீலங்கா அரசானது விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச போர்நிறுத்த நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானிக்கின்றது. ஆனால் இதனை அரசு ஒரு நல்ல நடவடிக்கையாக நோக்கவில்லை. 17 வருடகால வரலாற்றில் இப் போர்நிறுத்த அறிவிப்பு புதிய ஓர் விடயமல்ல. விடுதலைப் புலிகளை போரியல்ரீதியில் பலவீனப்படுத்தி பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவதே இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய வழியாகும். ஒருதலைப்பட்ச போர்நிறுத்தம் என்று கூறப்படும் இந்த வஞ்சகப் போர்நிறுத்தமானது விடுதலைப் புலிகளை இராணுவரீதியாகப் பலப்படுத்தும் நோக்கத்தினைக் கொண்டதாகும். அண்மைக்காலங்களில் யாழில் விடுதலைப் புலிகள் இராணுவரீதியாக அடைந்துவரும் தோல்விகளே அவர்களை இவ்வாறான போர்நிறுத்தத்திற்கு அவர்களை வரத்தூண்டியுள்ளன. ஆனால் நாங்கள் அவர்களது தந்திர போர்நிறுத்தத்திற்கு ஒத்துழைக்கமாட்டோம்.

இப்பொழுது அரச படைகள் விடுதலைப் புலிகளைப் பலவீனமாக்கச் செய்யும் முயற்சியை வெற்றிகரமாகத் தொடர்கின்றனர். அரசானது வடக்குக் கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் போராடவில்லை. ஆனால் பெரும்பான்மையாக வடக்கில் வாழும் மக்களின் உரிமைகளைக் காப்பாற்றப் போராடுகின்றது. இந்நாட்டில் பெரும்பான்மையாக வாழும் மக்களின் நலன்களுக்கு குந்தகம் வராத வகையிலேயே வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நாங்கள் விரும்புகின்றோம். ■

## பேச்சுவார்த்தைப் போக்கில் போர்நிறுத்தம் குறித்து ஆராய்வோம்

### சட்ட அமுலாக்கல் மற்றும் பிரதி நிதியமைச்சர் ஜி.எல். பீரிஸ்

அரசானது விடுதலைப் புலிகளுடன் எதுவித முன்நிபந்தனையுமின்றிப் பேசத் தயாராயிருக்கின்றது. அங்கீகரிக்கப்பட்ட மத்தியஸ்தராக நோர்வேயும் இருக்கலாம். முதலில் பேச்சுக்களை ஆரம்பிப்போம். அதன் பின்னர் போர்நிறுத்தம் குறித்து ஆராய்வோம். இதனைவிட பேச்சுவார்த்தை தொடரும் வேளையில் போர் தொடர்பாக வேறுபல விடயங்கள் குறித்தும் நாம் ஆராய வேண்டியிருக்கும் அல்லவா? ■

07ஆம் பக்கத் தொடர்ச்சி

## புலிகளின் அறிவிப்பை நாங்கள் உன்னிப்பாக அவதானிக்கின்றோம்

### தகவல்துறை அமைச்சர் அனுர பியதர்ஸ யாப்பா.

விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்துள்ள போர்நிறுத்தத்தை அரசாங்கம் எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அரசாங்கம் போர்நிறுத்தம் மேற்கொள்வது தொடர்பான தனது நிலைப்பாட்டையும் விதிமுறைகளையும் தெளிவாக வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் விளக்கிக் கூறியிருந்தார். விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்குத் தயாரென முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூறவில்லை. புலிகள் உண்மையாகவும் நேர்மையாகவும் இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும். ஆனால் புலிகள் போர்நிறுத்தத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள். ■

## மோதல் தவிர்ப்பு என்பது பேச்சுவார்த்தைக்குப் பின்

### வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர்

நிரந்தர அரசியல் தீர்வைக்கான நிபந்தனையற்ற பேச்சுக்கு அரசு தயாராகவே உள்ளது. மோதல் தவிர்ப்பு என்பது பேச்சுவார்த்தைக்குப் பின் ஆராயப்படலாம். விடுதலைப் புலிகள் குழந்தைகள் அல்ல, தற்செயலாக அவர்கள் யுத்தம் செய்ய வரவில்லை. அவர்கள் தமது இலக்கினை எட்டுவதற்காகவே இம்முறை இந்த ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளனர். ■

## சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறும் அதே- சமயம் யுத்தமும் தொடரும்

### பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா

சிறீலங்காவின் இனப்பிரச்சினை உள்நாட்டு விவகாரமாகும். அதனைத் தீர்க்க வெளிநாடுகள் ஆலோசனை, உதவி என்பன வழங்கலாம். ஆனால் அவற்றின் தலையீட்டை நாம் விரும்பவில்லை. இறுதியில் இனப்பிரச்சினைக்கான தீர்வை நாங்களே காணவேண்டும்.

கடந்தகால சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது இடம்பெற்ற நிகழ்வுகள் மீண்டும் இடம்பெற அனுமதிக்க முடியாது. சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இருதரப்பினரும் தயாராகவே உள்ளனர். இருந்தாலும் சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறும் அதே சமயம் யுத்தமும் தொடரும். புலிகளுக்கெதிரான தாக்குதல் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். ■

## அரசாங்கம் புலிகளை நம்பக்கூடாது

### ராமன்ன நிக்காயவைச் சேர்ந்த வேவல்தேனியா மெத்கல்லங்கார மகாநாயக்கர்

விடுதலைப் புலிகளின் மோசடிப் போர்நிறுத்தத்தில் அரசு அகப்பட்டுக் கொள்ளக்கூடாது. அவ்வாறு அரசு அகப்படுமாயின் அது விடுதலைப் புலிகளுக்கு புதிய ஆட்களைத் திரட்டவும், ஆயுதம் சேகரிக்கவும் ஏதுவாக அமைந்துவிடும். அதன் பின்னர் விடுதலைப் புலிகள் போர்நிறுத்தத்தை முறித்து எமது படையினரைத் தாக்குவர். ■



## ஓயாத அலைகள் -3 தொடர் நடவடிக்கையில் வன்னியின் வடமுனையில் மாவீரராகியவர்கள்

ஓயாத அலைகள்-3 நடவடிக்கையில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெயர்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு இதழிலும் வெளியிடப்பட்டு வந்தன. இவ்வரலாற்று நடவடிக்கையில் வீரச்சாவடைந்தவர்களின் பூரணமான விபரங்கள் மீண்டும் தொடராக வெளியிடப்படுகின்றன.

11.12.1999 பூநகரி கடல் நீரேரிப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்.

**2வது லெப். மாலினியன்**
குமாரசாமி கஜேந்திரன்
டைப் வீதி, பாண்டிருப்பு -2, கல்முனை,
அம்பாறை.

**லெப். ரவிவண்ணன்**
குழந்தைவேல் மோகன்
2ம் குறிச்சி, தாளங்குடா, ஆரையம்பதி,
மட்டக்களப்பு

**மேஜர் சிவகரன் (இறைமணி)**
தங்கராசா சர்வானந்தன்
பள்ளிக்குடியிருப்பு, மூதூர், திருமலை

**லெப். திருவ்ணமாறன்**
கோவிந்தசாமி கனகசபை
6ம் கட்டை, நெடியமடு, உன்னிச்சை,
மட்டக்களப்பு

**கப். கர்ணன் (தீண்ணன்)**
பாலசுப்பிரமணியம் பிரதீபன்
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி
(கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை, யாழ்)

13.12.1999 கட்டைக்காடு பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்.

**லெப். மலைமகன் (மலைமாறன்)**
அழகிப்போடி ஜெயா
விழாவெட்டுவான், நாவற்காடு, மட்டக்களப்பு

18.12.1999 வெற்றிலைக்கேணிப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்.

**2வது லெப். பூந்தணியன்**
கணபதிப்பிள்ளை ராஜன்
மண்டூர், மட்டக்களப்பு.

**மேஜர் மோகன்**
கணேசமூர்த்தி சரவணபவான்
அம்பலவன்பொக்கணை, முள்ளிவாய்க்கால்,
புதுக்குடியிருப்பு, முல்லை

26.12.1999 அன்று ஊரியான் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்.

**2வது லெப். தீரன் (புளிவண்ணன்)**
சுந்தரலிங்கம் சிவராஜ்
சாலினி ஜஸ் கொம்பனி முன், மல்லாவி
(விளானை, கரணவாய், காரைநகர், யாழ்)

**2வது. லெப். கலைமாறன்**
பஞ்சாட்சரன் பிரதாபன்
கோவிற்குடியிருப்பு, ஜெயபுரம், முழங்காவில்,
மன்னார்
(கொல்லர்புளியங்குளம், மாங்குளம்)

16.12.1999 பரந்தன் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்.

**2வது லெப். எழுவேந்தன்**
முத்தையா நாகராசா
மாணிக்கபுரம், றெட்பானா, விசுவமடு

17.12.1999 பரந்தன் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்.

**2வது லெப். சுகந்தன்**
அண்ணாமலை கோணேஸ்வரன்
2ம் வட்டாரம், வற்றாப்பளை, முள்ளியவளை,
முல்லை
(சங்கிலியன் வீதி, பண்டாரக்குளம், நல்லூர், யாழ்)

***2வது லெப். அசோகன் (குமரன்)**
தேவசுந்தரம் சேகர்
பொன்னகர், நட்டாங்கண்டல், துணுக்காய்,
மல்லாவி
(பேலியாகொட, கொழும்பு)

**2வது லெப். வஞ்சிப்பொழியன்**
நாகமணி தயாபரன்
வண்ணாங்குளம், சிலாவத்தை, முல்லை
(கந்தசாமி கோவிலடி, இத்திமடு, நெடுங்கேணி,
முல்லை)

**லெப். காந்தவராஜன்**
துரைராசா சரவணேஸ்
காக்கையன்குளம், இரணைஇலுப்பைக்குளம்,
வவுனியா
(பம்பைமடு, வவுனியா)

**2வது லெப். கானகமாறன்**
இராசேந்திரம் சந்திரமோகன்
கோதாண்டநொச்சிக்குளம், வவுனியா

**2வது லெப். நெரிக்குமரன்**
கணேசன் காந்தரூபன்
ரதன் குடியிருப்புத்திட்டம், தருமபுரம், கிளிநொச்சி

18.12.1999 அன்று தாளையடிப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்

**லெப். சுபர்பன்**
வேலாயுதம் உதயகுமார்
கிருஸ்ணர் கோவிலடி, கல்குடா, மட்டக்களப்பு

18.12.1999 அன்று பரந்தன் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்.

**லெப். முல்லைவேந்தன்**
செல்வராசா கமல்ராஜ்
இல. 0907, கட்சன் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி
(சுழிபுரம், யாழ்)

**வீரவேங்கை. வினோத்**
முத்துலிங்கம் மனோகரன்
10ம் கட்டை, சாமிபுரம், நல்லூர், பூநகரி, மன்னார்

**கப். கீதன் (அரிரூன்)**
கிருஸ்ணசாமி இருதயமூர்த்தி
செல்வா வீதி, உதயநகர் மேற்கு, கிளிநொச்சி
(மாத்தளை)

20.12.1999 அன்று பரந்தன் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்.

**லெப். விஜயகுமார்**
பந்துலசேனன் ஜெயசேகரன்
கொழும்பு
(கனகராயன்குளம், வவுனியா)

**மேஜர் குஞ்சுதன்**
நாகலிங்கம் சிவகணேசன்
விநாயகர்புரம், நாச்சிக்குடா, முழங்காவில்,
மன்னார்
(கட்டுக்குளம் பிள்ளையார் கோவிலடி, மன்னார்)

**லெப். தங்கமாறன்**
சந்திரன் றெஜிந்தன்
கொம்மாந்துறை, வல்வெட்டித்துறை, யாழ்

**கப். ரதன்**
பாலகுரு சந்திரசேகரன்
இந்தியா
(5ம் வாய்க்கால், கரடிப்போக்கு, கிளிநொச்சி)

21.12.1999 அன்று பரந்தன் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்.

**கப். சிறீகாந்தன்**
பரமலிங்கம் விக்கினேஸ்வரன்
இல. 647, 7ம் யூனிற், இராமநாதபுரம், கிளிநொச்சி

**வீ.வே. மாணிக்கம்**
சின்னத்தம்பி செல்வராசா
அம்பாந்தனாவெளி, கதிரவெளி, மட்டக்களப்பு
(ஆண்டாங்குளம், மட்டக்களப்பு)

21.12.1999 இயக்கச்சிப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்.

**லெப். கேணல். கண்ணன்**
மகேஸ்வரகனம் சிறிஸ்கந்தராஜா
விபுலானந்தர் வீதி, பொத்துவில் - 03, அம்பாறை

**2வது. லெப். செழுப்பரியன்**
வன்னியசிங்கம் ரஞ்சன்
பண்டாரவெளி, செங்கலடி, மட்டக்களப்பு

**லெப். வல்லோன்**
அன்ரன் பொனுக்கு சதீஸ் தோமஸ்
மணற்குடியிருப்பு, முல்லை

**2வது லெப். அரிவேந்தி**
சிவலிங்கம் கணபதிப்பிள்ளை
கோரகலிமடு, கிரான், மட்டக்களப்பு

28.12.1999 இயக்கச்சிப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்.

**மேஜர் நிசாந்தன்**
செல்லத்தம்பி இராமச்சந்திரன்
காயன்கேணி, வாழைச்சேனை, மட்டக்களப்பு

**லெப். வானவில்கள்**
வேலுப்பிள்ளை இளங்கோ
எல்லை வீதி, கல்முனை, அம்பாறை.

**2வது லெப். அகல்யூபன்**
பாலகிருஸ்ணன் ரவிக்குமார்
புதூர், மட்டக்களப்பு

**வீ.வே. மாரியமுதன்**
மாரியான் சௌந்தரராஜா
பிலாக்காடு, பெண்டுகள்சேனை, கிரான்
மட்டக்களப்பு

**2வது லெப். புஸ்பாகரன்**
சதாசிவம் வேலாயுதம்
பிலாச்சோலை, காக்காச்சிவெட்டை, மண்டூர்,
மட்டக்களப்பு

**லெப். கலைவாணந்தன்**
சீராளசிங்கம் விக்கினராஜா
50 வீட்டுத்திட்டம், பழுகாமம்-01, மட்டக்களப்பு

**2வது லெப். நாதன்**
பூபாலப்பிள்ளை பிரதீஸ்குமார்
சின்னவத்தை, வைக்கலை, மண்டூர்-01,
மட்டக்களப்பு

**மேஜர் தீபன்**
மயில்வாகனம் ரகுதாஸ்
புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால், முல்லை
(வத்திராயன் வடக்கு, தாளையடி, யாழ்)

**வீ.வே. பவளவதன்**
சுந்தரராஜன் சுதாகரன்
சாகாமவீதி, அக்கரைப்பற்று-08, அம்பாறை

**லெப். சதீஸ்காந்தன்**
சடாச்சரம் உதயகுமார்
நெடியவெட்டை, மண்டூர், மட்டக்களப்பு

27.12.1999 அன்று இயக்கச்சிப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்.

**மேஜர் தமிழ்மாறன் (மனோராஜ்)**
கணேஸ் சிவகுமார்
கடற்கரை வீதி, பாண்டிருப்பு, கல்முனை,
அம்பாறை

31.12.1999 அன்று இயக்கச்சிப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்கள்

**மேஜர் செந்தில்குமார் (ஜெயம்)**
கபிலேஸ் சண்முகநாதன்
புதுக்கொலனி, செங்கலடி, மட்டக்களப்பு

**2வது லெப். கேசவன்**
மோகனநாதன் தனுராஜ்
கோம்பாவில், புதுக்குடியிருப்பு, முல்லை
(முத்தவன கோவிலடி,
ஆனைக்கோட்டை, யாழ்)

**கப். நிசுதிபன்**
ஏகாம்பரம் மோகராசா
பாலமுனை, மண்டூர், மட்டக்களப்பு

20.12.1999 உடையார்கட்டுப் பகுதியில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தவர்

**கப்டன். கோபி (இளம்புலி)**
சுப்பிரமணியம் செல்வராஜ்
இல. 142 கணேசபுரம், முத்தையன்கட்டு,
முல்லை (புத்தளம்)

# ஓயாத அலைகளும் துட்டகைமுனுக் கனவுகளும்.

## ஜெனரல் அனுருத்த ரத்வத்தவின் கனவுகள்...

மறைந்த உலகின் முதற் பெண் பிரதமரின் அபிமானத்துக்கு உரிய வரல்லாத தம்பியும், சமாதானத் தேவதையாகத் தன்னைக் கற்பித்துக் கொண்டு சின்னஞ்சிறு குருத்துக்களின் உயிர்களைக்கூடக் கவனத்தோடு கிள்ளியெடுப்பதில் சாதனை நிகழ்த்திக் கொண்டிருக்கும் சிறீலங்கா அதிபர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் பாசநேசத்துக்குரிய மாமாவும், சிங்கள பௌத்த மகாவெறி நாயக்காக்களின் பார்வையில் முன்னாள் துட்டகைமுனுவும், பாதுகாப்புத் துணை அமைச்சருமான அரசியல் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவுக்கு ஆயிரம் கனவுகள். இவையாவுமே முன்னர் இருந்தன. சிறிமாவின் பிரதமர் பதவியைப் பெற்றுக்கொள்வதும், முடிந்தால் மருமகளை மூக்குச்சிதறக் கவிழ்த்துவிட்டு அதிபர் சிம்மாசனத்தில் சாய்ந்து கொள்வதும், அவரது கலர்கலரான கனவுகளில் முதலாவதும், முக்கியமானதும் ஆகும். இதிலே பிரதமர் கனவு இடையிட்டு வந்த ரட்ணசிறீ விக்கிரமநாயக்காவினால் பொய்த்துப் போய்விட்டது.

விடுதலைப் புலிகளை வெற்றிகொண்டு தனது புஜபல பராக்கிரமத்தைக் காட்டி, சிங்கள பௌத்த வெறியாளர்களின் ஆசீர்வாதத்தோடு சிறீலங்காவின் உச்சப் பதவியைப் பெற்றுக்கொள்வது அவரது நாளாந்தக் கனவு. இக்கனவு வெல்லுவதாகப் பகலும் இரவும் ரத்வத்த கனவு கண்டுகொண்டிருந்தார். இப்போதும் அந்த ஆசை அவரை விட்டு நீங்கவில்லை. இடையிலே அவரும் அவரது மகன்மாரும் தேர்தல் காலத்தில் மேற்கொண்ட காடைத்தனங்களால் அவரிடமிருந்த பிரதிப்பாதுகாப்பமைச்சர் பதவியானது மருமகளினால் பறிக்கப்பட்டிருந்தது. ஆனால் பின்னர் மீளவும் அவரிடம் அப்பதவி வழங்கப்பட்டுள்ளது.

### நத்தையாய் வெளிறது அலையிலே போனது

ஓயாத அலைகள் தொடர் நடவடிக்கைகள் அவரது ஆசைக் கனவுகளுக்கு வாய்க்கரிசி போட்டுங்கூட ரத்வத்தை மற்றவருக்குத் தெரியாமற்தான் மண்ணைத் தட்டிவிட்டு தனது புண்ணை நக்கிக்கொண்டார். இருந்தாலும் அடிபட்ட அவரது கனவுகள் இனிமேல் இரவுத் தூக்கத்தில் அவரை மிரட்டவே செய்யும் என்றுதான் இராணுவ ஆய்வாளர்கள் தனிக்கைகளையும் மீறித் தமது கணிப்பீட்டை முன்வைக்கின்றனர். ஐலண்ட், சண்டே ரைம்ஸ் 07-11-1999 இதழில் ஆய்வாளர் ஒருவர் இப்படிச் சொல்கிறார்.

ஜெயசிக்குறு மூலம் வருடக்கணக்கில் முயன்று பெற்ற வெற்றிகளைப் புலிகள் நாலே நாட்களில் அழித்துத் துடைத்துவிட்டனர். வன்னியை வெற்றி கொள்ளும் அனுருத்த ரத்வத்தையின் கனவு பயங்கரக் கனவாக இப்போது மாறிவிட்டது.

### ஓடியவர் முதுகில் காக்கா

இவரது கூற்றில் எள்ளளவும் தவறுமில்லை. நவீன துட்டகைமுனுவின் தூக்கம் இனிமேல் ஏக்க விழிப்புக்களாகவே இருக்கப் போகிறது என்பதை ஓயாத அலைகள்-3 தெளிவாகச் சொல்கிறது. புலிகளின் இந்தப் பாரிய பதிலடியால் எங்கே தனது பதவியும் கனவுகளும் பொய்யாகப் போய் விடுமோ என்ற ஏக்கத்தில், களத்திலிருந்து ஓடிவந்த இராணுவச் சிப்பாய்களைக்கூட முதுகிலே தட்டிக் காக்காய் பிடிக்க வைத்திருக்கின்றது. ஓடிவந்து வவுனியாவில் நின்றவர்களைக் கூட்டிவைத்து 1999இன் இறுதியில் ரத்வத்த நிகழ்த்திய பேச்சு நகைப்பிற்குரியது மட்டுமன்றி அவரது உள்ளக்கிடக்கையை உள்ளபடி காட்டுகின்றது.

### தமிழீழம் புலிகளின் தேசம்

உங்களது தாய்நாட்டைக் காக்கவும், பயங்கரவாதிகளின் நாட்டை ஒழிக்கவும் உங்கள் உயிரைப் பணயம் வைத்துள்ளீர்கள் என்று ரத்வத்த பேசியதாக டெயிலி நியூஸ் 8-11-1999இல் நிச்சட் டி சில்வா கூறுகிறார்.

அவரது பேச்சின் மூலம் தமிழீழம் பயங்கரவாதிகளின் அதாவது விடுதலைப் புலிகளின் நாடு என்பதும், சிறீலங்காவும் தமிழீழம் என்பதும் வெவ்வேறு தேசங்கள் என்பதும், தமிழீழத்தையும் பயங்கரவாதிகளான புலிகளையும் ஒழித்துக் கட்டுவதே அவரது கனவு என்பதும் தெளிவாகவே தெரிகிறது.

### அரசியற் கோமாளி

கனவுகளை மனதுக்குள் மறைத்து வைத்துக் கொண்டு இலக்கை நோக்கி நகரும் அரசியல் விவேகங்கூட ரத்வத்தவுக்கு இருந்ததில்லை. தனது கனவுகளைச் சண்டமாருதப் பிரசங்கமாகச் செய்து, பிறகு கனவுகள் கலையும்போது அசடு வழிவதே அவரது வழக்கமாக இருந்து வருகின்றது. அதனால் கனவுகளில் வாழும் அரசியற் கோமாளியாக அவர் தன்னை ஆக்கிக்கொண்டு வருகின்றார்.

### சப்புமல் குமரையா

1995இல், ரிவிரச நடவடிக்கை மூலம் யாழ்குடாவைச் சிங்கள இராணுவம் கைப்பற்றியதும், அங்கேயிருந்த இலட்சக்கணக்கான தமிழ்மக்களின் உயிர்ப்பெறுமதி கருதி, விடுதலைப் புலிகள் மெல்லமெல்லப் பின்வாங்கியதும்.., ரத்வத்தவின் கனவுகளுக்கு மேலும் வண்ணங்கள் தீட்டி ஒளிர வைத்ததென்னவோ உண்மைதான். யாழ்ப்பாணத்திலே சிங்கக் கொடியேற்றியபோது, வரலாற்றில் இரண்டாவது தடவையாகச் சிங்களம் யாழ்ப்பாணத்தை வென்றிருக்கின்றது என்றும் யாழ்ப்பாண மன்னன் கனகசூரிய சிங்கை ஆரியனிடம் இருந்து சப்புமல் குமரையா கி.பி 1450இல், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பிறகு பிரபாகரனிடமிருந்து நான் கைப்பற்றியிருக்கிறேனென்றும் விலாசமாக நினைத்தவர் அனுருத்த ரத்வத்த. இரண்டாவது சப்புமல் குமரையா எனப் பிறர் சொன்னபோது அந்தச் சுகமான கற்பனைகளில் தனது இராணுவத் தேரை இன்னும் இன்னும் ஆழமாக ஓட்ட நினைத்து இன்று ஆப்பிழுத்த குரங்காகி நிற்கிறார். யாழ்ப்பாணத்தை 17 ஆண்டுகள் ஆண்ட சப்புமல்கூட செண்பகப்பெருமாள் என்னும் ஒரு தமிழன்தான் என்ற வரலாற்று உண்மை ரத்வத்தவுக்குத் தெரியாதது வியப்புக்கு உரியதல்ல. இந்த ஆசைக்கனவிலேதான் பறயனாலங்குளத்தைக் கைப்பற்றியபோது அக்கிராமத்துக்குச் சப்புமல்புர என்று பெரும் விளம்பரங்களோடு ரத்வத்த பெயர் சூட்டினார்.

யாழ்ப்பாண வெற்றியினால் கிடைத்த தங்க விருதுகள், ஜெனரல் பதவி, நாயக்கர்களின் ஆசீர்வாதம், சப்புமல், துட்டகைமுனு பட்டப் பெயர்கள், சிங்கள வீதிகளில் வைக்கப்பட்ட அவரது பென்னம் பெரிய உருவப்படங்கள், அரசியல் ஜெனரலின் ஆசைக் கனவுகளை மேலும் ஆழமாக்கின அகலப்படுத்தின.

### கைக்குலுக்கலும் பாற் சோறும்

13.05.1997இல் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் தென்னாசியாவிலேயே மிக நீண்ட காலம் நடைபெற்ற போர் நடவடிக்கை எனப்பட்ட ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை சோதிடம் பார்த்து, பிரித் ஓதப்பட்டு, காப்புக் கட்டித் தொடக்கப்பட்ட போது, சீருடை தரித்து நின்ற அனுருத்த ரத்வத்த தனது கனவுகளைத் திருவாய் மலர்ந்தார்.

கண்டி வீதியைத் திறக்கும் இந்தப் போரில், வவுனியா கிளிநொச்சி இரு முனைகளிலிருந்தும் புறப்படும் எமது படைகள் வெசாக்தினத்துக்குள் சந்தித்துக் கைகுலுக்கும், பிறகு பாற்சோறு உண்டு வெற்றி கொண்டாடும் என்ற அவரது வீராவேசப் பேச்சோடு வீறு கொண்டு புறப்பட்ட படையால் ஒன்றரை வருடத்துக்குப் பின்னருங்கூட மாங்குளத்தை விட்டு அசைய முடியவில்லை. மாறாக விடுதலைப் புலிகள் கிளிநொச்சியைப் புறந்தள்ளி வென்று இலக்கின் தூரத்தை இன்னும் அதிகமாக்கினர். ஆயிரக்கணக்கான படைவீரர் இழப்பு, கோடிக்கணக்கான ஆயுத இழப்பைச் சந்தித்ததும் ரத்வத்தவின் கைகுலுக்கல் பாற்சோற்றுக் கனவு கனவாகவே மாற மாங்குளத்தோடு ஜெயசிக்குறு 98 டிசம்பரில் மரணமடைந்தது.

### குலுக்க நினைத்ததும் குலுங்கியதும்

ரத்வத்தவின் கனவுகள் மேலும் மேலும் வளரவே செய்தன. 50ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்துக்கான முன்தயாரிப்புக்கள்



கண்டித் தலதாமாளிகாவவில் நிகழ்ந்து கொண்டிருந்தபோது அனுருத்த ரத்வத்த தன்னைச் சிங்களச் சிங்கமாகக்கற்பித்துக் கொண்டு கர்ச்சனை செய்தார்.

கிளிநொச்சியிலிருந்து மாங்குளத்தினூடாக கண்டிக்குப் பேருந்து வரும். சுதந்திர தின விழாவில் கலந்து யாழ்ப்பாணம் சிறப்பிக்கும்.

காட்டுக்குள் சென்று புலிகளை வென்று பிரபாகரனுடன் கைகுலுக்கும் அவரது ஆசைக் கனவு கலைந்துபோக, காட்டுக்குள் சென்று புலிகளை வென்று பிரபாகரனுடன் கை குலுக்குவதற்குப் பதிலாக வெடிகுண்டு வைத்த வண்டியொன்று தலதா மாளிகாவவைக் குலுக்கி, கொண்டாட்டங்களை கொழும்பிற்கு மாற்ற வைத்தது. பிரபாகரன் ரத்வத்தவுக்கு கைகுலுக்கக் கண்டிக்கு வந்துள்ளாரென்று பத்திரிகைகள் வரிக்கு வரி கேலி செய்ததும், ரத்வத்த தனது ஆசைக்கனவுக் குழந்தையை மடியைவிட்டு இறக்கத் தயாராக இல்லை. ஆயினும் ராஜினாமா நாடகமாடினார்.

### சாவுக்குக் காலக்கெடு

புலிகளின் சாவுக்கு நாள் குறித்து அறிக்கைகள் விட்டார். மருமகளையும், குறைந்த வல்ல அதிகாரிகளையும் முன்னுக்குப் பின் முரணான காலக்கெடுக்களைச் சொல்ல வைத்தார். இராணுவ வல்லுனர்களின் எச்சரிக்கைகளுக்கு மாறாக யாழ் வவுனியாப் பெருஞ்சாலையின் இரண்டு பக்கங்களிலும் சிறகுகளை விரித்துப் படையினரை பரவவிட்டார். எப்படியாவது வன்னியின் புலிகளை இரண்டாகப் பிளந்து ஒடுக்கிவிடலாம் என்ற கனவுகளில் ரிவிபல, வாட்டர்செட் என்று நத்தை நகர்வுகள் நிகழ்த்திக் கவச வண்டிகளின் மூடிகளுள் அமர்ந்து களமுனைக்குப் போய் மயிரிழையிலே தப்பியதாக அடிக்கடி விடுகைகள் விட்டு, தனது நிறம் மாறாது காப்பாற்றிக் கொண்டார்.

### வந்த வெள்ளத்தோடு போன வெள்ளம்

02.11.1999 அன்று அனுருத்தவின் ஆசைக் கனவுக் கோட்டைகள் அலையுழுத மணற் கோட்டைகளாக சரிந்து போயின. அம்பகாமம், ஒலுமடு, கரிப்பட்டமுறிப்பு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, ஒதியமலை என நீட்டப்பட்டிருந்த சிறகுகள் ஓமந்தை வரை அரியப்பட்டுவிட்டன. பெருஞ்சாலைக்கு மறுபுறம் பனங்காமம், மூன்றுமுறிப்பு, பன்றிமடு, பெரியமடு, நட்சனாமருதமடு என்று சிறகுகள் நறுக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து தன்னை டிக்கு அப்பால் ஆக்கிரமிப்புச் சிறகுகள் ஒடுக்கப்பட்டுவிட்டன.

வந்த வெள்ளம் இருந்த வெள்ளத்தையும் அடித்துச் செல்வது போல இரண்டு வருடங்களுக்கு மேலாக ரத்வத்த முக்கி முக்கி வென்ற இடங்களையும் 1984 இலிருந்து சிறீலங்கா இராணுவம் ஆக்கிரமித்து வெளியோயா ஆக்கிய மணலாற்று நிலத்தின் பெரும் பகுதியையும் ஓயாத அலைகள்-3 அடித்துச் சென்றுள்ளதோடு அலையின் பெருமுழக்கம் வவுனியாவிலும், மன்னார் நகரத்திலும், பதவியா, திருமலையிலும் கேட்கத் தொடங்கியது.

ஓயாத அலைகள்-3 ஆரம்பிக்கப்படுகையின் அலைப்படிப்புக்கள் இவ்வாறு தென் முனையில் அடித்துக் கொண்டிருக்க வட முனையிலே வரலாற்றுச் சாதனைகள் ஓயாத அலைகள் 1இல் நிகழ்த்தப்பட்டு நல சப்புமல் குமரையாவான ரத்வத்தவின் கனவுகள் குடாவைக் கடைக்குள் கடாசவேண்டிய நிலைமை ஏற்பட்டது. 22.04.2000 அன்று 500 வருடங்கள் அந்நியர்களின் கட்டுப்பாட்டிலிருந்ததும் அதிலும் 50வருடங்கள் சிங்களவர்களின் கட்டுப்பாட்டில் இருந்து கொண்டு, தமிழீழத்தின் தொண்டைக்குள் சிக்கிய முள்ளாக விளங்கியதுமான ஆனையிறவுத் தளம் மீட்கப்பட்டதானது, அரசியல் ஜெனரல் ரத்வத்தவின் 1995இன் யாழ் ஆக்கிரமிப்பின் அடிப்படைத் தந்திரோபாயத்தை அத்திவாரத்தோடு தகர்த்தெறிந்தது.

### கனவுகள் அகலவில்லை

கனவுக்கோட்டைகள் கலைந்து கொண்டிருந்தன இந்த நிலையிலும், ரத்வத்தவின் ஆசைக்கனவுகள் மீண்டும் மீண்டும் முளைக்கிறது. அதன் ஒரு வெளிப்பாடே இப்போதைய தமிழீழத் தேசியத் தலைவரின் ஒரு மாதகால யுத்த நிறுத்த இடைவெளியில் ரத்வத்தவின் படைகளால் யாழ் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் கிளிநொச்சி தொடர் தாக்குதல்களாகும். இதற்கான பதிலடிகள் வெகுவிரைவில் ரத்வத்த அனுபவிக்க செய்வார் என்பதில் ஐயமில்லை. துட்டகைமுனுக்கள் தோற்பதில்லை என்ற பௌத்த பேரினவாதக் கனவுகளின் செல்லக்குழந்தையான அனுருத்த ரத்வத்த தனது கனவுகளுக்காக எத்தனை சிங்களக்கிராமங்களின் உயிர்க்கொழுந்துகளை காவுகொடுக்கப் போகின்றாரோ தெரியாது. ஆனாலும் விடுதலைப் போராட்டத்திற்குத் தேவையான நவீன படைக்கலங்களைக் காலத்திற்குக் காலம் வகைதொகையின்றிக் கொடுத்துத் தமிழீழ விடுதலையை விரைவுபடுத்தும் பெரும்பணியை இந்தத் துட்டகைமுனு செய்துவருகிறாரென்பதைத் தமிழ்மக்கள் எதிர்காலத்தில் நன்றியுடன் நினைவு கூர்வர்.